NITHIYAKALA

கலா ரசிகர்களேயே
அதிசயிக்க வைக்கும்
நவீன டிசைன்களில்
தங்க, வைர நகைகளைப்
பெற்றுக் கொள்ள

இன்றே விரையுங்கள்!

நியூ நித்தியகலா
நகைமாளிகை

19, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தொலைபேசி:— 547111.

தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4593 1984 ஜூன் 27 புதன்கிழமை ★ ★ ★ දිනපති

பொது சன நூலகம்

செய்தி இதழாகப் பதிவு செய்தது

நித்தியகலா!

22 கெரட் நகைகளுக்கு
நம்பிக்கை, நாணயம்,
உத்தரவாதம் அத்தனைக்கும்
நித்தியகலாவை
நாடுங்கள்

NEW Nithiyakala Jewellers

19, SEA STREET,
COLOMBO — 11.
PHONE: 547111

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின்

# அத்தியாவசிய உணவு பொருள் விற்பனையில் —மோசடி!—

## பலர் போலி பத்திரங்களை காட்டி வர்த்தகர்களாக நடித்து பொருள்களைப் பெற்றனராம்

கொழும்பு, ஜூன் 27

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்தில் பெரும் மோசடி நடந்தது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. பலர் போலிப் பத்திரங்களைக் காட்டி வர்த்தகர்களாக நடித்து கூ. மொ. வி. நிலையத்திடமிருந்து விற்பனைக்காக அத்தியாவசிய உணவுப் பொருட்களை

## டாக்டர்கள் தினமும் வெளிநடப்பு செய்ய திட்டம்

அரசாங்க வைத்திய சாலைகளில் கடமையாற்றும் டாக்டர்கள் தினசரி ஒன்று முதல் இரண்டு மணி நேரம் வெளிநடப்பு செய்ய திட்டமிட்டு வருகின்றனர்.

சம்பள உயர்வு, மேலதிக சலுகைகள் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (த-ய)

## விசேஷ பஸ்

கொழும்பு, ஜூன் 27

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் மடு தேவாலய உற்சவத்தை முன்னிட்டு விசேஷ பஸ் சேவைகள் நடத்தப்படும்.

போக்கு வரத்து அமைச்சின் செயலாளர் திரு. ஆர். வி. ரூபசிங்க இதனைத் தெரிவித்தார். (த-ர)

சோ



அப்ப பின்னை இரண்டு மணி நேரம் கூடுதலாக பிறைவேற் பிரக்டிஸ் ஜாம் ஜாம் எண்டு நடக்குமெண்டு சொல்லுங்கோவன்!

## பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கை தனித்து போராட முடியாது

### சர்வதேச உதவி தேவை என்கிறார் ஜனாதிபதி

லண்டன், ஜூன் 26

பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கை தனித்து போராட முடியாது. தனி நாடு கோரும் தமிழ் கெரில்லாக்களின் போராட்டத்தை அடக்குவதற்கு இலங்கை அரசுக்கு சர்வதேச உதவி தேவை.

பிரிட்டனில் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் தனிநாடு கோரும் தமிழர்கள் ஆயுதங்களை வாங்குவதற்காக பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் பணம் சேர்க்கப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்குமாறு இலங்கை அரசாங்கம் இன்னும் சம்பந்தப்பட்ட நாடுகளை உத்தியோகபூர்வமாக கோரவில்லை. எனினும் வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி றேகனுடன் நட

(4ஆம் பக்கம் பார்க்க).

## மரண வீட்டு செலவுகளை இ.போ.ச. ஏற்கும்

கொழும்பு, ஜூன் 27

## பிரிட்டிஷ் கூலிப்படை வீரர் பற்றிய செய்தி குறித்து

விற்பனைக்காக அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெற்றனராம்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை இப்படி ஏமாற்றிப் பொருள்களை வாங்கியவர்கள் அந்தப் பொருள்களைப் பொதுமக்களுக்கு அதிக விலைக்கு விற்று கொள்ளை இலாபம் அடித்திருக்கிறார்கள்- வர்த்தக கப்பல் துறை அமைச்சர் எம்- ஏஸ்- அமரசிறி இந்தத் தகவலைத் தெரிவித்தார்-

அமைச்சர் அமரசிறி நேற்று ஒரு மாநாடு நடத்தினார்.

வர்த்தக கப்பல் துறை அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், மேற்படி மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கம்பனிகள் பதிவாளரிடம் பெற்றதாகக் காண்பிக்கும் போலி பதிவு அத்தாட்சிப் பத்திரம், போலி பற்றுச் சீட்டுகள், போலி வருமான வரிப் பத்திரங்கள் போன்றவற்றை சமர்ப்பித்து தம்மை உண்மையான வர்த்தகர்கள் என்று காட்டியே பலரும் பொருள்களைக் கூ. மொ. வி. நிறுவனத்தில் கொள்வனவு செய்துள்ளனர்.

இவ்வாறு பெற்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைத்து அல்லது வேறு வர்த்தகர்களுக்கு அவற்றை விற்று, மோசடிக்காரர்கள் பெரும் இலாபத்தை அடைந்துள்ளனர்.

சில வர்த்தகர்கள் கொடுத்திருக்கும் முகவரியில் அவ்வாறான வர்த்தக நிறுவனங்கள் இயங்கவில்லை என்றும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

சிலர் உதிரிப் பாகங்களை விற்கும் கடைகளின் முகவரிகளைக் கொடுத்தும், அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனராம்.

இதனையடுத்து, அத்தியாவசிய உணவுப் பொருள்களின் மொத்த விற்பனையை உடனடியாக நிறுத்த அமைச்சர் திரு. அமரசிறி உத்தரவிட்டார்.

கூ. மொ. வி. நிறுவனத்தில் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவரும், உள்ளூர் வர்த்தகக் கமிஷனரும் ஆராய்ந்து சிபார்சு செய்தால் மாத்திரம், உண்மையான வர்த்தகர்களுக்கு பொருள்களை மொத்தமாக விநியோகிக்கலாம் என, கூ. மொ. வி. அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியிருக்கிறார்.

கூ. மொ. வி. நிறுவன அதிகாரிகள் சிலர் கொடுத்த தகவல்களை அடுத்து, உள்ளூர் வர்த்தக திணைக்கள அதிகாரிகள் திடீர் பரிசோதனைகளை நடத்தி, மேற்கண்ட மோசடியைக் கண்டு பிடித்தனர்.

மோசடியில் ஈடுபட்டவர்கள் பெயர்கள், விநியோகஸ்தர்கள் பட்டியலில் இருந்து நீக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-க)

## இ. போ. ச. ஏற்கும்

கொழும்பு, ஜூன் 27

யாழ். கோண்டாவில் இ. போ. ச. பஸ் டிப்போ பண கொள்ளை முயற்சியின் போது உயிரிழந்த இ. போ. ச. கட்டுப்பாட்டாளரின் மரண வீட்டுச் செலவுகளை வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஏற்கும்.

மரண வீட்டுச் செலவுகளை வழங்கும்படி வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

காலஞ் சென்றவரின் குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு வழங்குவது பற்றி ஆராய ஒரு பிரத்தியேக குழு நியமிக்கப்படும்.

இந்தக் குழு நஷ்ட ஈட்டுக்கான தொகையை நிர்ணயிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த- ங)

# பற்றிய செய்தி குறித்து அமைச்சு விளக்கம்

கொழும்பு, ஜூன் 27

இலங்கை வெளிநாட்டு இராணுவ உதவியைக் கோரியதாக, சென்ற வருடம் ஒரு புரளி கட்டவிழ்த்துவிடப் பட்டது. இதனை இலங்கை அரசாங்கம் மறுத்த போதிலும், சில வட்டாரங்களில் அது இன்றும் உண்மையாகவே கருதப்பட்டு வருகிறது.

ராஜாங்க அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இப்படியான மற்றும் ஒரு செய்தி தற்போது இந்து பத்திரிகையில் வெளிவந்தது, பி. ரி. ஐ. நிறுவனத்தாலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழ் கெரில்லாக்களை அழிப்பதற்காக, கூலிப் பட்டாளத்தை இலங்கை வாடகைக்கு அமர்த்தியுள்ளதாகவும் மற்றும் இஸ்ரவேலின் "மொசாட்" பிரிவைச் சேர்ந்த 50 பேர் ஏற்கெனவே இலங்கை வந்து விட்டனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சு பேச்சாளர் தெரிவித்ததாகக் கூறியே பி. ரி. ஐ. இந்த செய்தியை வெளியிட்டிருக்கிறது.

எனினும் கூலிப் படையினர் என்று கூறப்படுவோர் அரைடசினுக்கும் குறைந்தவர்கள் என்ற உண்மை தெரிந்திருந்தும் பிரஸ்தாப செய்தியில் அது வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்தவர்கள். இந்த நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளில் பல பாதுகாப்பு, பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது.

50 "மொசாட்" நிபுணர்கள் இலங்கைக்கு வந்திருப்பதாக பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் கொழும்பு அரசாங்க வட்டாரங்களை குறிக்கோள்காட்டி செய்தி வெளியிட்டிருக்கிறது. அண்மையில் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் இதை வெளியிட்டிருந்தார். அரசாங்க வட்டாரங்கள் கூறுவதாக தெரிவிப்பது தற்பொழுது நடத்தப்படும் பிழையான பிரசாரங்களில் இதுவும் ஒன்று ஆகும்.

மேற்கண்டவாறு ராஜாங்க அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

# அலுவலக மொழியாக வடக்கில் தமிழ் உபயோகம்

## வியாழன் முதல் அமுலாக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 26

அரசமைப்புச் சட்டத்தின் நான்காம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ் மொழியை அலுவலக மொழியாக, வட மாகாணத்தில் அமுலாக்கும்படி உத்தரவிடப் பட்டிருக்கிறது.

வியாழக்கிழமை முதல் அரச மொழி உபயோகத்தை அமுலாக்கும்படியும் கேட்கப்பட்டிருக்கிறது.

அரச மொழி அமுலாக்கல் பற்றிய விடயங்களைக் கண்காணிக்க மூவர் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜேக்கூன் இன்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டன.

அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும் அங்கு சமூகமளித்திருந்தார்.

* தமிழில் வரும் கடிதங்களுக்கு தமிழிலேயே பதில் அனுப்ப வேண்டும் —

* ஒருவர் தமிழில் பேசினால் தமிழிலேயே பதில் அளிக்க வேண்டும் —

* ஒரு கடிதத்தின் எந்த மொழியில் கையெழுத்து இடப்பட்டிருக்கிறதோ, அதே மொழியிலேயே பதிலும் கொடுக்க வேண்டும் —

மேற் கண்டவாறான உத்தரவுகள், வட மாகாணத்திலுள்ள உள்ளூர் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியனவற்றின் தலைவர்களுக்கும் உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்கள் ஆகியோருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. விஜேக்கூன் தெரிவித்தார்.

அரசகரும மொழி அமுலாக்கலில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் பொதுமக்களின் புகார்கள் ஆகியவற்றைக் கவனிக்க மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. எல். பற்றிக், உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

தொலைபேசி எண் 23301 மூலம் இக்குழுவுடன் தொடர்பு கொள்ளலாம்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எழுதிய கடிதத்தின் பிரகாரமே, அரச மொழி அமுலாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் திரு. விஜேக்கூன் தெரிவித்தார்.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 242க்கு இணங்க, கருமங்கள் நடைபெற வேண்டும் எனக் கேட்கப் பட்டுள்ளதாகவும் திரு. விஜேக்கூன் கூறினார். (க)

## யாழ். பதில் அரச அதிபர் பஞ்சலிங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக புதியவர் ஒருவர் பதவியேற்கும்வரை, மேலதிக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம், பதில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றுவார்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜேக்கூன் இத்தகவலை வெளியிட்டார்.

தற்போதைய அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இவ்வாரக் கடைசியில் பதவியில் இருந்து விலகுகிறார் என்பது தெரிந்ததே. (க-120)

# பிரிட்டனுடன் இந்தியா தொடர்பு

புதுடில்லி, ஜூன் 26

இலங்கையில் தமிழ் கெரில்லாக்களுக்கு எதிராக போராட பிரிட்டிஷ் கூலிப் படையினரை அமர்த்த இலங்கை முடிவு செய்திருப்பதாக வெளியான தகவல் குறித்து இந்திய அரசாங்கம் பிரிட்டனுடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

இந்த கூலிப்படை வீரர்கள் "எஸ் ஏ எஸ்" எனப்படும் பிரிட்டிஷ் விசேஷ விமான சேவைகள் பிரிவின் முன்னணி கமாண்டோக்கள் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரவேலின் உளவு ஏஜென்சியான "மொசாட்" நிபுணர்களுடன் இணைந்து இந்த பிரிட்டிஷ் கூலிப்படையினர் செயற்படுவார்கள் என்றும் இந்த அதிகாரி கூறினார்.

தமிழ் கெரில்லாக்களை முறியடிக்க உளவு ஸ்தாபனம் ஒன்றையும் இராணுவப் பயிற்சி பெற்ற பொலீஸ் பிரிவு ஒன்றையும் இலங்கையில் ஏற்படுத்த இவர்கள் உதவுவார்கள்.

இந்த விவகாரம் குறித்து பிரிட்டிஷ் அரசுடன் இந்தியா தொடர்பு கொண்டபோது, அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கூலிப்படையினர் தற்போதைய "எஸ் ஏ எஸ்" அங்கத்தவர்கள் அல்லர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த கூலிப்படையினர் ஏற்கனவே ஓமானில் இருந்து இலங்கை வந்து விட்டனர். ஆனால் இது குறித்து இலங்கை அரசுடன் இந்தியா இன்னும் தொடர்பு கொள்ளவில்லை என்றும் அந்த இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி கூறினார்.

அதே சமயம் 50க்கு மேற்பட்ட "மொசாட்" நிபுணர்கள் குழு மாத முற்பகுதியில் இலங்கை வந்திருப்பதாக கொழும்பில் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. கெரில்லா எதிர்ப்பு யுத்தப் பயிற்சிகளிலும் உளவு அறியும் துறைகளிலும் இலங்கை ஆயுதப் படையினருக்கு பயிற்சி அளிக்கப்படுவதாகவும் —

முன்னாள் எஸ் ஏ எஸ் அங்கத்தவர்களை வரவழைப்பது இலங்கை அரசாங்கத்தின் ஒரு தனிப்பட்ட ஏற்பாடு என்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இதற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த)

# தலைப்பிறை கண்டால் அறிவிக்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 27

"ஈதுல் - பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவதற்காக "ஷவ்வால்" மாதத்தின் தலைப்பிறை நாட்டில் எந்தப்பகுதியிலாவது தென்பட்டால் அதுபற்றி கொழும்பு பெரிய பள்ளி வாசலுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பொதுச் செயலாளர் முஸ்லிம் பொது மக்களுக்கு இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தொலைபேசி இலக்கம் 32110 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

இதேவேளை, ரமழான் பெருநாள் கொண்டாட்ட தினத்தை நிர்ணயிப்பதற்காக ஒரு மாநாடு ஜூன் 30 ஆம் திகதி மாலை பெரிய பள்ளிவாசலில் நடைபெறும்.

இந்த மாநாட்டில் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள ஜும்ஆப் பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாக்கள், உலமாக்கள், கதீப்மார்கள் ஆகியோர் பங்கு பெறுவார்கள் என்று செயலாளர் அல்ஹாஜ் ஏ. எச். ஷாபி முகம்மது அறிவித்திருக்கிறார். (ண-7)

## நோன்பு தொழுகை நேரம்

27—6—1984

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.23 |
| ஸுபஹு | — காலை | 4.38 |
| சூரிய உதயம் | — காலை | 5.58 |
| ளுஹர் | — பகல் | 12.20 |
| அஸர் | — பி.ப. | 3.42 |
| மஃரிபு | — மாலை | 6.30 |
| இஷா | — இரவு | 7.50 |

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# விடுதியில் அனுமதி இன்றி மாணவர் இருக்கின்றனர்

கண்டி, ஜூன் 26

"பேராதனைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் விடுதிக்குள் உத்தரவின்றி சில மாணவர்கள் இருக்கின்றார்கள். இவ்வாறு இருப்பவர்கள் மூன்றும் வருட மாணவர்களின் நண்பர்களாவர். அங்கிருக்கும் எல்லா விடுதிகளிலும் 2800 பேர் இருக்கின்றனர். வெளியாரும் அங்கு இருப்பதை அறிவேன்"

இவ்வாறு கூறினார் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் பீ. எல். பண்டிதரத்ன..

கடந்த 19ஆம் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்ததாகக் கூறப்படும் மருத்துவ பீட மாணவர் எச். பீ. ஏ. பத்மசிறி என்பவரின் மரணம் தொடர்பான மரண விசாரணை தொடர்ந்து மூன்றாவது நாளாக நடைபெற்றது.

அங்கு சாட்சியமளித்த போதே திரு. பண்டிதரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

கண்டி பிரதம மாஜிஸ்திரேட் திரு. வி. நாணயக்கார முன்னிலையில் நடைபெற்றுவரும் இவ்விசாரணையில் சாட்சி மேலும் கூறியதாவது:—

"இப்பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 5000 மாகும்.

இவர்களில் சிலர் பல்கலைக் கழக அனுமதியின்றி விடுதிகளில் இருந்து வருகிறார்கள். இங்கு 2800 மாணவர்களுக்கு மாத்திரமே தங்குமிட வசதிகள் உண்டு

## பேராசிரியர் பண்டிதரத்ன தொடர்ந்து சாட்சியம்

இந்நிலையில் ஏனைய மாணவர்களில் சிலர் தம் நண்பர்களோடு அங்கு தங்குகிறார்கள். நூற்றுக்கு முப்பத்தைந்து வீதமானோர் இங்கு தங்கி இருப்பவர்களில் பெண்களாவர். 1,600 பேர் ஆண்களாவர்.

நான் எனது உத்தியோக பூர்வ விடுதியில் வசிப்பதில்லை. காரணம் எனக்குப் பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். மேலும் மாணவர்கள் கூச்சலிடும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இவை காரணமாகவே நான் அங்கு வசிக்க விரும்பவில்லை.

மாணவர் விடுதிகளுக்கு அருகில் விரிவுரையாளர்களின் விடுதிகளும் இருக்கின்றன. நான் பல்கலைக் கழகத்தில் இருந்த காலப் பகுதியிலும் இதே போன்ற கூச்சல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

"1953 ஆம் ஆண்டு ஹர்த்தாலின் போதும், 1963 ஆம் ஆண்டில் "டட்லி சேனநாயக்கா கல்பகே" சம்பவங்களின் போதும் நடைபெற்ற சம்பவங்கள் நினைவில் இருக்கின்றன. அதன் பின்னர் இடம் பெற்ற சம்பவங்களும் எனக்கு ஞாபகம் இருக்கின்றன.

1965ஆம் ஆண்டில் சேர் நிக்கலஸ் ஆட்டிகலயின் நிர்வாகத்துக்கு எதிராக மாணவர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சில உப வேந்தர்கள் பல்கலைக் கழக உபவேந்தருக்கான விடுதிகளில் வசிக்கத்தான் செய்தார்கள். பேராசிரியர் ஈ. ஓ. ஈ. பெரெய்ராவின் காலத்திலும் மாணவர் போராட்டம் இருந்தது. பேராசிரியர் பீ. ஈ. ஈ. பெர்ணண்டோ அவரது உத்தியோக பூர்வ உபவேந்தர் விடுதியில் வசிக்கச் செல்லவில்லை. நானும் அவ்வாறே வசிக்கச் செல்லவில்லை.

"பல்கலைக் கழகத்துக்கு பொலீஸாரின் உதவி கோரப்பட்டதை விரிவுரையாளர்கள் எதிர்த்தனர். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் என்ற ஒன்று இருந்த போதிலும் அதில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மிகவும் சிலரே. எல்லாப் பீடங்களிலும் ஆசிரியர் சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

இவர்களில் எவரும் பொலீஸாரின் உதவியைக் கேட்டதில்லை. பொலீஸாரைப்போன்று பாதுகாப்புப் பிரிவின் வேலைத் திட்டம் ஒன்று அவசியம் என்பது பற்றிய உதவியை விஞ்ஞான பீடத்தில் உள்ளவர்கள் என்னிடமும் அரசாங்கத்திடமும் கேட்டிருந்தனர்.

பல்கலைக் கழகத்தில் முன்பிருந்ததைப் போல் அல்லாது உணவு விநியோகம் இப்பொழுது வேறு முறையில் நடைபெறுகின்றது. சில மாணவர்கள் தங்களது உணவை தாமாகவே தயாரித்துக் கொள்வதும் உண்டு."

சட்டத்தரணி திரு. ஜயம்பதி விக்கிரமரத்ன—: கண்ணீர்ப் புகை பிரயோகித்தது பற்றி உங்களுக்கு அறிவிக்கப்பட்டதா?,

சாட்சி:— கண்ணீர் புகை எத்தகைய சந்தர்ப்பத்தில் பிரயோகிக்கப்பட்டது என்பது பற்றி எனக்குத் தெரிவிக்கப்பட்ட விவரத்தில் குறிப்பிடப்படவில்லை.

மாஜிஸ்திரேட்:— நீதிக்கும் நியாயத்திற்குமாக கண்ணீர் புகை பிரயோகிக்கப்பட வேண்டிய இடத்தில் துப்பாக்கியால் சுடலாம் என ஏ. எஸ். பி- இங்கு தெரிவித்திருக்கிறார்.

சாட்சி:— பாதுகாப்புப் பிரிவின் தலைவரான ஜனப் யூசுப் என்பவர் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தார்.

தர்மரத்னவும், விஜயரத்னவும் சம்பவத்தை நேரிற் கண்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதி ஒன்று பேராதனைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

' பேராசிரியர் ஹலபே என்பவருக்கு 1969ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் நிகழ்ந்த கைகலப்பின் போது இராணுவ அதிகாரி கன்னத்தில் அடித்ததாக கூறப்படுவது பற்றியும் எனக்குத் தெரியாது.

சில விரிவுரையாளர்கள் பல தரப்பட்ட அரசியல் நோக்கங்களின் பொருட்டு அதற்கு ஆதரவு கேடியது பற்றி எனக்கு நன்கு தெரியும்.

"1976 ஆம் ஆண்டு வீரசூரியா சம்பவத்தின் போது திரு. விமலரத்ன நீதிபதியின் விசாரணை அறிக்கையை நான் படித்துப் பார்க்கவில்லை.

அது அசாதாரண முறையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் என்பது பற்றியும் எனக்குத் தெரியாது."

இவ்வாறு திரு. பண்டிதரத்ன கூறினார்.

பேராதனைப் பல்கலைக்கழக சட்ட வைத்திய பிரிவின் விரிவுரையாளரான டாக்டர் ஸீ. ஏ. பபாபுள்ளே சாட்சியம் அளிக்கும் பொழுது கூறியதாவது,

"நான் கடந்த ஒரு வருட காலமாக கண்டி மேலதிக சட்ட வைத்திய அதிகாரியாக கருமம் பார்க்கின்றேன். இக்கால எல்லைக்குள் 875 நோயாளர்களையும் 110 பிரேதங்களையும் பரிசோதனை செய்திருக்கின்றேன். கடந்த 20ஆம் திகதி இரவு 9–30 மணியளவில் பல்கலைக்கழக பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த குணத்திலக்க (12324) என்ற பொலீஸ் கான்ஸ்டபிளின் காயத்தைப் பரிசோதனை செய்தேன்.

அவரது தலையின் வலது புறத்திலும் காலிலும் காயங்கள் காணப்பட்டன. அந்தக் காயங்கள் கற்கள் எறியப்பட்டதனால் ஏற்பட்டவையாகும். எனக் கருதலாம்.

காயங்களைப் பரிசோதனை செய்த பொழுது ஒரு நாளைக்கு முன்னர் அவை இடம் பெற்ற காயங்களாகும் எனக் கூறலாம். காயப்பட்ட இடங்களில் முறிவுகள் ஏதும் இருக்கவில்லை"

மாஜிஸ்திரேட்:— பெரிய கல் ஒன்றினால் தலையில் வீசி அடிக்கப்பட்டால் அந்தக் காயம் மூலம் மரணம் நிகழக் கூடும் அல்லவா?

டாக்டர் பபாபுள்ளே:— அது போன்ற காயத்தினால் மரணம் ஏற்பட இயலாது.

ஏ- எஸ்- பீ- திரு- செனவிரத்ன:— நீங்கள் கல்லினால் வீசித் தாக்கப்பட்டு இறந்த ஒருவரின் பிரேதத்தைப் பரிசோதனை செய்ததுண்டா?

டாக்டர் பபாபுள்ளே:— இல்லை-

சட்டத்தரணி திரு- லால் விஜயநாயக்க:— கான்ஸ்டபிள் குணத்திலக்கவின் காயங்கள் பாரதூரமானவையா?

டாக்டர் பபாபுள்ளே:— அவை அவ்வளவு பாரதூரமான காயங்கள் அல்ல."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது-

(எ—105)

## சந்தேக நபர் தப்பியோட்டம்

பதுளை, ஜூன் 26

பதுளை சிறைச்சாலையிலிருந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சந்தேக நபர் ஒருவர் தப்பியோடி விட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நுவரெலியாவில் நடைபெற்ற ஒரு கொலை சம்பந்தமாக அந்தோனிமுத்து என்பவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சுகயீனமுற்று பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்தே இவர் தப்பியோடியுள்ளார்.

இவர் மற்றுமொரு நோயாளியின் 45 ரூபா ரொக்கப் பணத்தையும் திருடிக்கொண்டு ஓடியதாகவும் கூறப்படுகிறது.

பதுளை பொலீஸார் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

(எ—37)

## சுங்க கலெக்டர் கொழும்புக்கு மாற்றம்

பேசாலை, ஜூன் 27

தலைமன்னார் துறை சுங்க கலெக்டராகக் கடமையாற்றிய திரு. பாலேந்திரா கடந்த புதன்கிழமை முதல் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு கொழும்பில் கடமையாற்றிய சுங்க கலெக்டர் திரு. கே. கே. சுப்பிரமணியம் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

(எ—25)

## சந்தேக நபர்கள் தொடர்ந்து விளக்க மறியலில்

கொழும்பு, புஞ்சி பொரலையில் புதுவருட தினத்தன்று நடைபெற்ற பார்சல் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விளக்க மறியலில் இருந்து வரும் சந்தேக நபர்கள் நால்வரையும் ஜூலை 6 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கொழும்பு மேலதிக நீதிவான் திரு. ஆர். எம். ஜீ. ராஜபக்ஷ இந்த உத்தரவை பிறப்பித்தார்.

## மனைவியின் பிரிவு தாங்காத கணவர் நஞ்சருந்தி மரணம்

வவுணதீவு, ஜூன் 26

மனைவியின் பிரிவுத்துயர் தாங்காத கணவர் ஒருவர் மனைவியின் புதைகுழி மீது நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமையன்று மட்டக்களப்பு கிரான் குளத்தில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:—

தேவிகா என்பவர் கடந்த 6ஆம் திகதி மாரடைப்பால்

நடத்தும் இவர் சம்பவதினம் காலை மீன் விற்ற பணத்தைத் தனது- மாமியாரிடம் வாங்கச் சென்றாராம்.

சென்றவர் மனைவியின் புதை குழி மீது புரள்வதை இவரது உறவினர் ஒருவர் கண்டுள்ளார்.

அங்கு விரைந்த போது, "புருடன் என்ற களைக் கொல்லி மருந்தை அவர் குடித்து விட்டதாகவும் சிறிது தண்ணீர் தரும் படியும் கேட்டுள்ளார்.

அங்கிருந்து வீட்டுக்குக்

தினபதி
சிறு விளம்பரம்

## இஸ்லாமிய கீதம்

திருக்குர்ஆன், புர்தா ஷரீப், பத்று மௌலூத், முஹியத்தீன் மாலை, ஐய்யூப் நபி, யூசுப் நபி, பிலால் (ரலி), சரித்திரம், நோன்

## மாணவர் குடிபோதையில் ஏசினால் அதனை பொருட்படுத்த வேண்டாம் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது

### பல்கலைக்கழக கான்ஸ்டபிள் சாட்சியம்

கொதிக்க வைக்க குசினிப் பக்கம் சென்றேன்.

திருக்குர்ஆன், பூர்தா ஷரீப், பத்று மௌலூத், முஹியத்தின் மாலை, ஐய்யூப் நபி, யூசுப் நபி, பிலால் (ரலி), சரித்திரம், நோன்பின் சிறப்பு, நூறு மஸாலா, காரைக்கால் தாவூத் ஈ. எம். ஹனீபா, சேக் முஹம்மது, ஹுஸைன்தீன் மற்றும் பலர் பாடிய இஸ்லாமிய கீதங்கள், நாயகத்தின் பிறப்பின் சிறப்பு போன்றவை, பதிவு செய்யப்பட்ட கஸட்கள் வாங்க சிறந்த இடம்.
Twinkle, P1, Front Street. Colombo 11.

---

## அரசாங்க அறிவித்தல்

குறிப்பு இல. 3/41/597

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப் பட்டவாறன காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணியைப் பொதுச் சேவை ஒன்றிற்கென எடுத்துக் கொள்ள எண்ணியிருக்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு 84.6.14 ஆம் திகதி 301/9 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேச வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

அட்டவணை

அமைவு:—
மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் லக்கல பெரும்பாக இறைவரி அலுவலகர் பிரிவில் கங்கல உடசியபத்துவ, கலுங்க (பகுதி) கிராமம்.

காணியின் பெயர்:—
வெலங்கொல்ல.

விசாலம்:—
0 ஏக்கர் 2 றூட் 00 பேர்ச்

பட இல.:—
பு. மி. ப. 20 மேலதிக 2

துண்டு இல.:—
1098

வர்ணன் மாபிடிகம,
மூலஸ்தான உதவி அரசாங்க அதிபர்,
மாத்தளை மாவட்டம்.
மாத்தளைக் கச்சேரி,
மாத்தளை.
1984 – 06 மாதம் 06 ஆம் திகதி

1564

---

## ...என ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது

### பல்கலைக்கழக கான்ஸ்டபிள் சாட்சியம்

கண்டி, ஜூன் 26

பொலீஸ் நிலையத்தின் முன்புறமாக மூன்று இளைஞர்கள் வந்து எங்களைப் பயமுறுத்தினர். அவர்கள் குடிபோதையில் காணப்பட்டனர்.

பேராதனைப் பல்கலைக்கழக பொலீஸ் நிலைய கான்ஸ்டபிள் பி.ஏ.டி. குணத்திலக்க இவ்வாறு தெரிவித்தார்-

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கடந்த 19ஆம் திகதி நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் போது உயிரிழந்த மருத்துவபீட பட்டதாரி மாணவர் எச். பி. ஏ. பத்மசிறியின் மரண விசாரணை கண்டி மாஜிஸ்திரேட் திரு. ஸி. நாணயக்கார முன்னிலையில் தொடர்ந்து திங்கட்கிழமை நடைபெற்றது.

கான்ஸ்டபிள் பி. ஏ. டி. குணத்திலக்க (36) சாட்சியம் அளிக்கையில் மேலும் கூறியதாவது:—

நான் 11 வருடகாலம் பொலீஸில் சேவையாற்றியுள்ளேன். பல்கலைக்கழக பொலீஸ் நிலையத்தில் கடந்த டிசம்பர் 27ஆம் திகதி முதல் பணியாற்றுகின்றேன்.

இதற்கு முன்னர் இரத்தினபுரி பொலீஸ் நிலையத்தில் பொது நலத் தொடர்பு அதிகாரியாகக் கடமையாற்றியிருக்கிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழக பொலீஸ் நிலையத்தில் ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஒரு பொலீஸ் சார்ஜன்ட், 10 கான்ஸ்டபிள்கள் ஆகியோர் கடமை புரிகின்றனர்.

இம்மாதம் 16ஆம் திகதி 4 மணிக்கு ஒரு புகார் கிடைத்தது. அதனை விசாரித்துப் பார்க்கும் பொழுது பொலீஸ் நிலையத்தின் முன்புறமாக 3 இளைஞர்கள் வந்து எங்களைப் பயமுறுத்தினர் அவர்கள் குடிபோதையில் இருந்தனர்.

உங்களைக் கத்தியால் குத்துவோம்" என்று அவர்கள் தூஷண வார்த்தைகளால் எங்களை ஏசினர். அவர்கள் தூற்றிய அளவுக்குக்கூட, அவர்களுக்கு எதிராக நாம் எதுவும் செய்யவில்லை. கைது செய்யவும் இல்லை.

பொலீஸாரை மாணவர் எவ்வளவு சாற்றினாலும், அதை அசட்டை செய்ய வேண்டாம் என பொலீஸ் உயர் அதிகாரிகள் எமக்கு ஆலோசனை கூறியிருந்ததே இதற்குக் காரணமாகும்.

இதன் பின்னர் குடி போதையில் இருந்த நபர், அவர்களின் நண்பர்களால் இழுத்துச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் பொலீஸ் நிலையத்துக்கும், பல்கலைக்கழக பாதுகாப்பு பிரிவுக்கும் இடையிலுள்ள பகுதியில் நடைபெற்றது.

மாணவர்கள் அச்சந்தர்ப்பத்தில் அங்குமிங்கும் சென்று கொண்டிருந்தனர். அவ்வேளையில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் கருணாதாச அங்கு இருக்கவில்லை.

இதுபற்றி பின்னர் நான் அவருக்கு அறிவித்தேன்.

கடந்த 19ஆம் திகதி மாலை பொலீஸ் நிலையத்தில் இருந்தேன் அன்று திரு. கருணாதாசாவுக்கு காய்ச்சலாக இருந்தது. அவருக்குக் கசாயம் தயாரித்துக் கொடுத்தேன்.

இரவு 9–30 மணியளவில் பசை தயாரிக்க, சுடு தண்ணீர் கொதிக்க வைக்க குசினிப் பக்கம் சென்றேன்.

அவ்வேளை குசினிக் கதவைத் தட்டிய ஒரு நபர், உள்ளே வந்தார். கதவு மூடியிருக்கவில்லை. அவர் யார் என இதுவரை எனக்குத் தெரியவில்லை.

அவரைப் பார்த்து, "நீர் யார்" என்று கேட்டேன். அப்பொழுது எனக்குச் சிறிது பயம் கூட ஏற்பட்டது.

எனது வீட்டுக்கு வேறு யாராவது வந்தால், ஏன் வந்தீர்கள் என்று கேட்பதுண்டு.

இலங்கையின் வடக்குப் பகுதியில் பயங்கரவாதம் இருப்பது தெரியும். அங்குள்ள பொலீஸ் நிலையங்களுக்குள் சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு சிலர் திடீரென உட்புகுந்துள்ளதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

இவ்வாறு கான்ஸ்டபிள் குணத்திலக்க சாட்சியம் அளித்தார்.

(சு–105)

---

# வண்டி பஸ்ஸுடன் மோதியதால் மூதாட்டி மரணம்

வவுனதீவு, ஜூன் 27

போ. ச. பஸ் ஒன்று மாட்டு வண்டில் ஒன்றுடன் மோதியதால் 72 வயது மூதாட்டி ஒருவர் மரணமானார்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமையன்று மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதியில், தாழங்குடா எனும் இடத்தில் இடம் பெற்றது.

தாழங்குடாவைச் சேர்ந்த வீ. சங்குபதி எனும் 72 வயது மூதாட்டி, கிரான்குளம் எனும் இடத்தில் இடம் பெற்ற நடமாடும் கண்சிகிச்சை நிலையத்திற்கு மாட்டு வண்டியில் சென்றார்.

இவருடன் இவரது மகள் ராஜமணியும் (வயது 35) சென்றார்.

கண்சிகிச்சை பெற்றுவிட்டு திரும்பிவரும் வழியில் விபத்து நடைபெற்றது.

வேடன் கட்டுமலை எனும் குடியிருப்புப் பக்கத்தில் இருந்து போ. ச. பஸ் ஒன்று மாட்டு வண்டிலுக்குப் பின்னல் வந்தது.

பஸ் மாட்டு வண்டிலின் அச்சாணியில் மோதியதால் அச்சாணி கழன்று, வண்டி வீழ்ந்தது.

மாட்டு வண்டிலை ஓட்டி வந்த பெரியான் மாட்டுடன் ஒரு பக்கமாக சாய்ந்தார்.

வீ. சங்குபதியும், ராஜமணியும் நடுப்பாதைக்கு தூக்கி எறியப்பட்டனர். இரத்த வெள்ளத்தில் இருந்த அவர்கள், மோதிய பஸ்ஸிலேயே மட்டக்களப்பு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு சங்குபதி மரணமானார்.

மட்டக்களப்பு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீ பஞ்சலிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

அதிர்ச்சியும் குருதியோட்டமும் மரணத்திற்குக் காரணம் என அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

பஸ் டிரைவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி பொலீஸாருக்கு இவர் உத்தரவிட்டார்.

(எ–ங–318)

---

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:—

தேவிகா என்பவர் கடந்த 6ஆம் திகதி மாரடைப்பால் மரணமானார். இவரது கணவரான பொ. ஆனந்தன் (21 வயது) மனைவியின் பிரிவு தாங்காது கவலை கொண்டிருந்தார்.

மீன் விற்பனையில் வாழ்க்கை ...

... மருந்தை அவர் குடித்து விட்டதாகவும் சிறிது தண்ணீர் தரும்படியும் கேட்டுள்ளார்.

அங்கிருந்து வீட்டுக்குக் கொண்டு வரப்பட்ட அவர் பின்னர் மரணமானார்.

மரண விசாரணை அதிகாரி திரு. க. சிவநாதன் தற்கொலை என தீர்ப்பளித்தார். (எ–ங–318)

கொழும்பு மேலதிக நீதிவான் திரு. ஆர். எம். ஜீ. ராஜபக்ஷ இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்ட "ஆட்டோ" ரிக்ஷோவையும் விடுவிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(எ–11)

---

# இடம்பெயர்ந்த ஆசிரியர்கள்

## இக்கட்டான நிலையில் அலைகின்றனர்

### வணசிங்கா கவலை

வவுனதீவு, ஜூன் 26

கடந்த ஆண்டு ஜூலை வன்செயல்களை அடுத்து இடம் பெயர்ந்த தமிழ் ஆசிரியர்கள் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்றனர்.

எட்டு மாத காலமாக சம்பளமின்றி வறுமைப் போராட்டம் நடத்திய ஆசிரியர்கள் சிலர் அதிர்ச்சி – கவலை – விரக்தி என்பவற்றால் மனநோய் பிடித்து அலைகிறார்கள்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு வடக்கு வட்டாரக் கிளை வருடாந்த பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தாய்ச் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா கூறினார்.

மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

வடக்கு வட்டாரக் கிளைத் தலைவர் திரு. க. தங்கவேல் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.–

வன்செயலில் இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் பழைய இடங்களுக்குத் திரும்பி வந்து வாழ முடியாது என்ற கருத்தில்தான் அவ்வாறு இருக்கின்றனர்.

எட்டு மாத காலமாக வருமானம் எதுவுமின்றி ஒருவனால் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்?

ஆறு மாத காலங்கள் சம்பளமின்றிக் கஷ்டங்களை அனுபவித்தவன் நான்.

வட பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்ற ஆசிரியர்கள் குடும்பத்தை நடத்த வசதியின்றி மேசன், தச்சு, தோட்டத் தொழில் போன்ற கூலி வேலைகளைச் செய்து கஷ்டப்படுகின்றார்கள். இது இன்று ஆசிரியர்களின் தலை எழுத்தாக அமைந்து விட்டது.

இந்நிலையில் இவ்வாசிரியர் விவகாரத்தில் தீர்வு காண்பதற்காக இருவித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இது குறித்துக் கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். இது எமது நடவடிக்கைகளில் முதலாவதாகும்.

சர்வதேச தொழிற் சங்கப் பிரதிநிதி குலாம்சிங் துணையுடன் இ. தொ. க. செயலாளர், தலைவர் ஆகியோருடன் எமது செயலாளர் தொடர்பு கொண்டு ஆவன செய்து வருவது எமது இரண்டாவது கட்ட நடவடிக்கையாக அமைந்துள்ளது.

இவற்றின் மூலம் எமது இப்பிரச்சினைக்குத் தீர்வு விரைவில் கிடைக்குமென்றும் நம்புகின்றேன்.

இன்று இவ் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட நிலைமை எமக்கு ஏற்படவில்லை. அதனால் நாம் அதிர்ஷ்டசாலிகள் தான்.

என்றாலும் அவர்களது பிரச்சினைகளை எமது பிரச்சினைகளாக கருதி தீர்வு காண நாம் போராட வேண்டும்.

இடம் பெயர்ந்த ஆசிரியர் விவகாரத்தில் எமது சங்கம் இயன்றவரை போராட்டம் நடத்தி வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

(எ–318)

---

# வருடாந்த மாநாட்டுக்கு பதில் 9 மாகாணங்களிலும் மாநில மாநாடுகள்

### இ. தொ. கா. திட்டம்

கொழும்பு, ஜூன் 27

ஒரு குறிப்பிட்ட இடத்தில் வருடாந்த மாநாட்டை நடத்துவதை விடுத்து 9 மாகாணங்களிலும் மாநில மாநாடுகளை நடத்த, இ. தொ. காவின் உயர்மட்ட தேசிய கவுன்சில் தீர்மானித்திருக்கிறது.

இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி இதனை தினபதிக்குத் தெரிவித்தார்.

இ. தொ. கா. தலைவரும், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தலைமையில் தேசிய கவுன்சில் கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வழமையாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் வருடாந்த மாநாட்டை நடத்துவதால் குறிப்பிட்ட அளவான பிரதிநிதிகள் மட்டுமே மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.


இப்படி பரவலாக மாநில மாநாடுகளை நடத்துவதன் மூலம் நாடெங்கிலும் உள்ள சகல அங்கத்தினர்களும் மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

எனவே செப்டம்பர் 9 ஆம் திகதி கொழும்பில் இ. தொ. கா. பேராளர் மாநாடு நடத்தப்படும்.

பேராளர் மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் மாநில மாநாடுகளில் அங்கத்தினர்களுக்கு நேரடியாகவே அறிவிக்கப்படும் என திரு. செல்லச்சாமி தெரிவித்தார்.

(தூ–ய)

கந்தப்பு வாத்தியார்: செல்வா




# பிள்ளைகள் கல்வியில் முன்னேற பெற்றோரும் ஒத்துழைக்க வேண்டும்

## அபி. சபை கூட்டத்தில் உரை

தலைமன்னார், ஜூன் 26

"மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பெற்றோர்களின் பங்கு முக்கியம் ஆசிரியர்களுடன் பெற்றோரும் ஒத்துழைப்பு வழங்கும் போதே மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்"

தலைமன்னார் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்தி சபையின் கூட்டத்தில் பேசும் போது இவ்வாறு கூறினர்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். குலாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"பெற்றோர் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தாததால் அவர்கள் கல்வியில் முன்னேற வாய்ப்பில்லாமல் இருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலை செல்கின்றனரா எப்படிப் படிக்கின்றனர் என்பதை அறிவதில் அக்கறை கொள்வதில்லை.

பிள்ளைகள் கல்வியில் அடையும் முன்னேற்றத்தை பெற்றோர் நாளாந்தம் கவனிக்க வேண்டும். அவர்களது கல்விக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். அத்துடன் பிள்ளைகளின் ஒழுக்கத்திலும் பெற்றோர் அக்கறை காட்ட வேண்டும்" என்றார். (ல—286)

# பெண்களை இழிவுபடுத்தும் காட்சிகள் வேண்டாம்

## ஜெய்சங்கர் கூறுகிறார்

படவுலகில் நுழைந்த நாள் முதல் இன்றுவரை ஜெய்சங்கர், பத்திரிகையாளர்களுடன் பழகும் விதமே அலாதி. ஒவ்வொருவரையும் அவர்கள் குடும்ப பேக்ரவுண்ட் உட்பட தெரிந்து கொண்டு அக்கறையுடன் விசாரிப்பதனாலேயே அவர் மக்கள் கலைஞராக விளங்குகிறார்.

ஜெய்சங்கரைப் பார்த்து ஏடாகூடமாகக் கேள்வி கேட்க முடியாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

"ஷட்டில்காக்கை ஒரு தேகப் பயிற்சியாக செய்கிறீர்களா? என்று கேட்க,

"ஆமாம். டெய்லி டூ அவர்ஸ் (தினமும் இரண்டு மணி) ஆட வேண்டும் என்று முயற்சி செய்து தவிர்க்க முடியாத போது மட்டும் ஆடாமல் மற்ற சமயங்களில் ஆடுகிறேன். இது டிரிம்மாக இருக்க உதவுகிறது" என்றார் ஜெய்.

"காஞ்சி பெரியவரைச் சந்தித்தீர்களாமே, உங்களுக்கு தெய்வீக விஷயங்களில் கூட ஈடுபாடு உண்டா" என்று கேட்க,

"ஆமாம், நான் பெரிய ஆஷாட பூதி அல்ல. என் மனைவி கீதாவிற்கு கொஞ்சம் ஈடுபாடு அதிகம். அவள்தான் வேலூரில் பெரியவர் வந்த போது பார்க்க வேண்டும் என்றாள். அதை சரவணனிடம் சொல்லப்போக, அவர் உடனே புறப்படுங்கள் என்று கூற,



ஜெய்சங்கர்

நானும் குடும்பத்துடன் பெரியவர்கள், புதுப் பெரியவர் ஆக மூவரையும் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது.

மறுபடி காஞ்சிபுரத்தில் என் ரசிகர் மன்ற கூட்டத்திற்கு ஸ்ரீகாந்துடன் போனபோது மீண்டும் பெரியவர்களைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பங்கள் அதிர்ஷ்டவசமாக அமைந்தன. மறக்க முடியாதவை" என்றார்.

"இனி முழு வில்லனாக நடிக்கப் போவதில்லை என்று முடிவு செய்து இருப்பதாகப் படித்தேன். உண்மையா?" என்று கேட்க,



மின் இணைப்புக்கு கொங்றீட் கம்பங்கள்:

# தீர்மானத்தை மீளாய்வு செய்க

## அக்கரைப்பற்று பிரதேசசபை அம்பாறை அபி. சபையிடம் கோரிக்கை

நிந்தவூர், ஜூன் 26

"மின் இணைப்பு வழங்குவதற்கு கொங்றீட் கம்பங்களை நிறுத்த வேண்டுமென்னும் தீர்மானத்தை மீளாய்வு செய்யவும்.."

இவ்வாறு, அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுக் குழுவைக் கோருவதற்கான தீர்மானம் ஒன்றை அக்கரைப்பற்று பிரதேச சபை நிறைவேற்றியிருக்கிறது.

இச்சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் ஜனப் எஸ். எம். எம். ஆதம்லெவ்வை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுக் குழுவின் தீர்மானம் அமுல் நடத்தப்படுவதால், ஒரு கம்பத்தைப் பெற மக்கள் ஆயிரத்து 200 ரூபா செலுத்த வேண்டியிருக்கிறது.

ஆனல் மரக் கம்பம் ஒன்றை 400 ரூபாவுக்கே பெற்றுக் கொள்ளலாம்.

கொங்றீட் கம்பமே நிறுத்தப்பட வேண்டுமென வற்புறுத்தப்படுவதால் பொது மக்கள் மீது பெரும் பளு சுமத்தப்படுவதாகவே கருதவேண்டியிருக்கிறது.

எனவே கொங்றீட் கம்பங்களை நிறுத்தி மின் இணைப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் நிறைவேற்றுக் குழு எடுத்துள்ள தீர்மானத்தை மீளாய்வு செய்ய வேண்டும்" — இவ்வாறு அந்தப் பிரேரணை மீது கருத்துத் தெரிவிக்கப்பட்கின்றது. (ல—318)

# ஓடும் ரயில் முன் பாய்ந்து இளம் பெண் மரணம்

கிளிநொச்சி, ஜூன் 26

இளம் பெண்ணொருவர் ஓடும் ரயில் முன் பாய்ந்து மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவரது சடலம் உருக்குலைந்த நிலையில் கிளிநொச்சி

# மூதூர் பிரயாணிகள் சோதனை

மூதூர், ஜூன் 26

மூதூரிலிருந்து மோட்டார் படகு மூலம் திருகோணமலைக்குப் போய் வரும் சகல பிரயாணிகளும் திருகோணமலைப் பொலீஸாரால் சோதனையிடப்படுகின்றனர்.



தான் உண்மையிலேயே ஒரு பலசாலியான கதாநாயகன்தான் என்பதை சரிதாவைத் தூக்கி நிரூபித்து விட்டார் தியாகராஜன். படம்: திச்சட்டி கோவிந்தன். (ல-10)

செய்து இருப்பதாகப் படித்தேன். உண்மையா?" என்று கேட்க,

"கேரக்டர் வில்லத் தன்மையுடன் இருப்பதில் தப்பில்லை. ஆனால் ரேப்சீன் போன்ற பெண்களை இழிவுபடுத்தும் காட்சிகள் வேண்டாமென்கிறேன். அவற்றை என் ரசிகர்கள் விரும்புவதில்லை. ஓரளவு கண்ணியமான வில்லன் என்றால் ஓகே.

விதி போல அழுத்தமான ரோல் என்றால் சந்தோஷமா செய்கிறேன். நான் செய்வது தப்பு இல்லையே!" என்றார் ஜெய்.

"அதுசரி, சுமார் 20 வருடங்களாக படவுலகில் இருக்கிறீர்களே, ஏதாவது சாதனை செய்ய ஆசை இல்லையா?" என்று கேட்க,

"சாதனையா? ஓ ஹ்ஹோ!" என்று சிரித்த ஜெய்,

"இருபது வருடங்களாய் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்து இருக்கிறேனே அது போதாதா? மறுபடியும் நாடகம் போடலாம் என்று இருக்கிறேன். நண்பர்களுக்கு உதவவும், தொழில் முறையில் இறங்கி பலருக்கு உதவி செய்யவும் ஆசை இருக்கிறது. பார்ப்போம்!" என்று சொல்லி விட்டு புறப்பட எழுந்தார். (ல-10)

# 2 கதாநாயகிகள் நடிக்கும் புதுப்படம்

"முள்ளும் மலரும்", "கண்மணி பூங்கா" மற்றும் பல படங்களைத் தயாரித்த ஆனந்தி பிலிம்ஸ் புதுப் படம் ஒன்றைத் தயாரிக்கிறது.

இந்தப் படத்தின் பெயர் "கண்ணில் பெரியுது வானம்" மோகன், ராஜ்குமார் நடிக்கிறார்கள். இருவருக்கும் ஜோடிகளாக இரு பிரபல கதாநாயகிகள் நடிக்கிறார்கள்.

ஏராளமான பொருட் செலவில் உருவாகும் "கண்ணில் தெரியுது வானம்" படத்தின் கதையை அனந்து எழுத, கண்மணி சுப்பு வசனம் எழுதுகிறார். ஒளிப்பதிவு, கணேசபாண்டியன்.

திரைக்கதை டைரக்ஷன், அமீர்ஜான். எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைக்கும் ஒரு பாடல் ஒலிப்பதிவுடன்,ஏவி.எம். ஒலிப்பதிவு கூடத்தில் தொடக்க விழா நடந்தது.

வி. மோகன் தயாரிக்கும் "கண்ணில் தெரியுது வானம்" படத்தின் வெளிப்புறக் காட்சிகள் ஊட்டி, குன்னூர், கொடைக்கானல் பகுதிகளில் படமாகும்.

ஆகஸ்ட் மாதம் இப்படத்தை திரையிட திட்டமிட்டுள்ளனர். (ஜ-10)

## நளினிக்கு பதில் சசிகலா

ஸ்ரீ மீனாட்சி புரொடக்சன்ஸ் "அன்பின் முகவரி" படத்தில் நடித்து வந்த நளினி, உறுதி அளித்தபடி கால்ஷீட் தராததால் அந்தப் படத்தில் இருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அவருக்குப் பதிலாக இப்போது சசிகலா நடிக்கிறார்.



சசிகலா

அவர் சம்பந்தப்பட்ட வளைகாப்புக் காட்சி சமீபத்தில் அருணாசலம் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

மோகன், எஸ். எஸ். ராஜேந்திரன், கவுண்டமணி, சத்யராஜ், செந்தில், ஜனகராஜ், வை. விஜயா மற்றும் பலர் நடிக்கும் இதன் கதை - வசனத்தை எழுதி மணிவண்ணன் இயக்கி வருகிறார். சபாபதி ஒளிப்பதிவைக் கவனிக்க, இளையராஜா இசை அமைக்கும் இதன் படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (ல-10)

# முரடர்களிடம் சிக்கினார் மாதவி!

மாதவி ஒரு பேரழகி! அவளின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கியவர்கள் பலர் உண்டு. ஆனால் அவள் ஒரு பெண் சிங்கம்; யாருக்கும் அடங்க மாட்டாள்.

இவளின் பெண்மையை சூறையாட சில முரடர்கள் முயற்சிக்கிறார்கள். புலியிடம் சிக்கிய புள்ளிமான் மாதிரி மாதவி துடிக்கிறாள்.

"கண்ணகி" பத்திரிகையின் ஆசிரியர் விஜய்க்கு இது தெரிந்து விடுகிறது. தன் உயிரைப் பணயம் வைத்து முரடர்களிடமிருந்து மாதவியைக் காப்பாற்றுகிறார்.

இந்தக் காட்சி வி. வி. கிரியேஷன்ஸ் தயாரிக்கும் "வீட்டுக்கு ஒரு கண்ணகி" படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

விஜய்யாக விஜயகாந்தும், மாதவியாக நளினியும் இந்தக் காட்சியில் நடித்தார்கள்.

ஜெய்சங்கர், எஸ். எஸ். சந்திரன், ரவீந்தர், ராதாரவி, செஞ்சி கிருஷ்ணன், சுஜாதா, இளவரசி ஆகியோர் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

ஷோபா கதை எழுதி, கேசவன் ஒளிப்பதிவு செய்கிறார். சங்கர் - கணேஷ் இசை அமைக்க, திரைக்கதை வசனம் எழுதி எஸ். ஏ. சந்திரசேகர் டைரக்ட் செய்கிறார். (ஜ-10)

கொண்டார்.

இவரது சடலம் உருக்குலைந்த நிலையில் கிளிநொச்சி பொலீஸாரினால் மீட்கப்பட்டது.

இப் பெண்ணைப் பற்றிய தகவல்கள் எதுவும் தெரியவில்லை.

இவருக்கு சுமார் 20, 21வயது இருக்கலாம் எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இவரது மரணம் தொடர்பாக கிளிநொச்சி விசாரணையை மரண விசாரணை அதிகாரி திரு. முருகேசு யோகலிங்கம் நடாத்தினார். பிரேத பரிசோதனையை மாவட்ட அதிகாரி திரு. பி. நவரட்ணராசா நடத்தினார். (ல-244)

பொலீஸாரால் சோதனையிடப்படுகின்றனர்.

பிரயாணிகளிடமிருந்து தேசிய அடையாள கார்ட்டைப் பெற்று பார்வையிட்ட பின்னரே பிரயாணத்தைத் தொடர அவர்கள் அனுமதிக்கிறார்கள்.

அடையாள கார்ட் இல்லாதவர்களும், கொண்டு செல்லத் தவறுவோரும் நீண்ட நேரம் விசாரணைக்குட்படுத்தப்படுகிறார்கள்.

இவ்விசாரணையின் போது சந்தேகத்துக்குரியவர்களை இவர்கள் இராணுவத்தினரிடம் கையளிக்கிறார்கள். (ல-186)

# வடபகுதி விவசாயிகளுக்கு விதை நெல்

சாவகச்சேரி, ஜூன் 26

இந்த ஆண்டு காலபோக நெற் செய்கைக்குத் தேவையான விதை நெல்லை யாழ்ப்பாண விவசாயிகட்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த ஆண்டு காலபோக நெற் செய்கை பெரு வெள்ளம் காரணமாக அடியோடு அழிவுற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாகவே அரசாங்கம் விதை நெல்லைக் கொடுத்துதவ முன் வந்திருக்கிறது.

விதை நெல் தேவைப்படும் விவசாயிகள், தத்தம் பகுதி பயிற் செய்கை உத்தியோகத்தருடன் கால தாமதமின்றி தொடர்பு கொள்ள வேண்டும்.

இவ்வாறு கமநல சேவைப் பகுதியினர் யாழ்ப்பாண விவசாயிகளைக் கேட்டிருப்பதாக பயிற் செய்கை உத்தியோகத்தர் திரு. சி. கந்தசாமி தெரிவித்தார். (ல-51)

யாழ்., கிளிநொச்சி

# விசேட சேவை அலுவலர்களுக்கு கடனுதவி

சித்தன்கேணி, ஜூன் 26

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த விசேட சேவை அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்ய அரசாங்கத்தினால் 10 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்., கிளிநொச்சி விசேட சேவை அலுவலர் கழகம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையாவுடன் கடனுதவி வழங்குதல் சம்பந்தமாகத் தொடர்பு கொண்டனர்.

இதனை அடுத்து யாழ். அரசாங்க செயலகத்தில் இயங்கும் கடன் வழங்கும் சபை மூலம் மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்காக 10 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். மாவட்ட அரசாங்க செயலக கடன் வழங்கு சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்., கிளிநொச்சி மாவட்ட விசேட சேவை அலுவலர் கழகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (ல-283)

# வேப்பவெட்டுவானில் செங்கல், ஓடு தொழிற்சாலை

## ஜூலையில் திறந்துவைக்கப்படும்

வவுணதிவு, ஜூன் 26

மட்டக்களப்பு வேப்பவெட்டுவானில் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் செங்கல் ஓடு தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்சாலை ஜூலை மாத இறுதியில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையினால் திறந்து வைக்கப்படும்.

செங்கலடி - பதுளை பிரதான வீதியில் இலுப்படிச்சேனை என்னுமிடத்தில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டு இருக்கிறது.

இப்பகுதியில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டே ஓடுகள் தயாரிக்கப்பட இருக்கின்றது.

அரசாங்க மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் இத்தொழிற்சாலை செயல்படவிருக்கிறது. மூலப் பொருட்கள் வழங்குபவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜூலை மாத நடுப்பகுதியில் அனுப்பி வைக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ல-318)

# பிறந்த தின வாழ்த்து



செல்வி ஜெஸ்மின்

அனுராதபுரம் இக்கிரிகொல்லாவையைச் சேர்ந்த நூர் மொஹமட் தம்பதிகளின் அருந்தவப் புதல்வி செல்வி ஜெஸ்மின் சென்ற 23 - 6 - 84 இல் தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

மல்லிகையின் பெயரைப் பெற்றிருக்கும் ஜெஸ்மினை வாப்பா, உம்மா, உம்மாவாப்பா, உம்மம்மா, மாமாமார், மாமிமார், சாச்சாமார், சாச்சிமார், பெரியப்பா, பெரியம்மா, கஹட்டகஸ்திகிலிய தாருக்கருகமயைச் சேர்ந்த அப்பா, வாப்பம்மா உட்பட உறவினர்கள் அனைவரும் பல கலையும் கற்று, புகழ் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 27 —
சுடர் 17 கதிர் 2712


## நிதி உதவியும் கண்டனமும்

நாட்டில் உள்ள எத்தனையோ கூட்டுத்தாபனங்கள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன.

அவற்றை ஒன்றில் தனியார் துறையினரிடம் அரசாங்கம் கையளிக்க வேண்டும் அல்லது தனியார் துறையினர் பொறுப்பு ஏற்க விரும்பாவிட்டால் ஒரேயடியாக மூடிவிட வேண்டும்.

இப்படி நாம் பல தடவைகளில் வலியுறுத்தி இருக்கிறோம்.

சமீபத்தில் பாரிஸ் நகரத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழுவின் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திலும் மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

நிதி திட்டமிடல் அமைச்சு அறிக்கை ஒன்றில் இந்தத் தகவல் வெளியிட்டு இருக்கிறது.

இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகள் குழு இம்முறை 5 கோடியே 410 லட்சம் அமெரிக்க டாலரை இலங்கைக்குத் தர உறுதி அளித்திருக்கிறது.

இந்தத் தொகை கடந்த வருடத்தில் கிடைத்த தொகையைக் காட்டிலும் 14.4 சதவீதம் அதிகமாகும்.

உதவி அளிக்கும் நாடுகள் குழு, கூடுதலான உதவியை அளிக்க முன் வந்த போதிலும் இலங்கையில் பல காரியங்கள் செம்மையாக நடைபெறவில்லை என்று கண்டனம் தெரிவித்திருக்கிறது.

# சிவாஜி – மூப்பனார் கோஷ்டி மோதல்

## தஞ்சை மாவட்ட இ. காங்கிரஸில் பிளவு

வலங்கைமான், ஜூன் 26

தஞ்சை மாவட்ட இ. காங்கிரஸ் மோதல் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது. மூப்பனார் கோஷ்டியினரும், சிவாஜி கோஷ்டியினரும் "குடுமிப்பிடி" சண்டையில் இறங்கியுள்ளனர்.

தஞ்சை மாவட்ட இ. காங்கிரசில் சிவாஜி கோஷ்டி என்றும், மூப்பனார் கோஷ்டி என்றும் பிரிந்து செயல்பட்டு வருகிறார்கள். மாவட்ட தலைவர் துளசி ஐயா வாண்டையார் சிவாஜி கோஷ்டியில் இருக்கிறார்.

நடந்து முடிந்த இடைத் தேர்தலுக்குப் பிறகு இந்த கோஷ்டி மோதல் இப்போது மீண்டும் வெடித்துள்ளது.

பாபநாசம் வட்டார இ.காங்கிரஸ் தலைவராக இருந்த ஆர். கிருஷ்ணமூர்த்தியை நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக எஸ். செல்வராஜனை புதிய வட்டாரத் தலைவராக துளசி அய்யாவாண்டையார் நியமித்ததைத் தொடர்ந்து இந்த மோதல் வெடித்தது.

உடனே பாபநாசம் வட்டார காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை கிருஷ்ணமூர்த்தி கூட்டினார். பாபநாசம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ராஜாராமன் தலைமையில் இந்தக் கூட்டம் நடந்தது.

### தீர்மானம்

கூட்டத்தில் தஞ்சை மாவட்ட இ. காங்கிரஸ் தலைவர் துளசி அய்யாவாண்டையாரை நீக்க வேண்டும் என்று மேலிடத்தை வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதைக் கண்டித்து புதிதாக வட்டாரத் தலைவராக நியமிக்கப்பட்ட செல்வராஜன் அறிக்கை விட்டார். தமிழக இ. காங்கிரஸ் தலைவர் பழனியாண்டிக்கு தந்தி கொடுத்தார். அதில் "கட்சிக் கட்டுப்பாட்டை மீறி செயல்படும் ராஜாராமன் எம். எல். ஏயை நீக்க வேண்டும்" என்று அவர் வற்புறுத்தி இருந்தார்.

### போராட்டம்

இதைத் தொடர்ந்து பாபநாசம் காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் இ. காங்கிரஸ் மற்றும் சிவாஜி மன்ற ஊழியர் கூட்டம் வட்டாரத் தலைவர் செல்வராஜன் தலைமையிலும் துணைத் தலைவர் வி. சர்க்கரை முன்னிலையிலும் நடந்தது. கூட்டத்தில் ராஜாராமன் எம். எல். ஏ. பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டால், அவரைச் சுற்றி முற்றுகைப் போர் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

ராஜாராமன் எம். எல். ஏ. பாபநாசம் தொகுதி உறுப்பினர். ஆனால் அவர் கடந்த 5 ஆண்டுகளாக தொகுதியில் தங்காது திருவையாறில் குடியிருக்கிறார். இதனால் தொகுதி மக்கள் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

அப்போது வட்டாரத் தலைவராக இருந்த கிருஷ்ணமூர்த்தியும் வட்டாரக் கமிட்டியைக் கூட்டி பொறுப்பாக கட்சிப் பணி ஆற்றவில்லை. இருவரும் உறுப்பினர்கள் சேர்ப்பதில் அக்கறையாக ஈடுபடவில்லை. தேசிய விழாக்களை ஏற்பாடு செய்து கலந்து கொள்ளவில்லை.

உள்ளாட்சி தேர்தல் பணி குழுவிற்கு ஒத்துழைப்பு தரவில்லை. எனவே ராஜாராமன் எம். எல். ஏயைச் சுற்றி முற்றுகைப் போர் நடத்துவது, அவருக்கு எதிராக 10 ஆயிரம் கையெழுத்து வாங்கி மேலிடத்துக்கு அனுப்புவது என்று தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாவட்டப் பிரதிநிதியாக கே. என். ராமச்சந்திரன் கலந்து கொண்டார்.

இந்தத் தீர்மானம் குறித்து ராஜாராமன் எம். எல். ஏயுடன் தொடர்பு கொண்டு கேட்டதற்கு அவர் கூறியதாவது:—

அவர்கள் முறையான செயல்வீரர் கூட்டத்தைக் கூட்டவில்லை. பாபநாசத்தில் கூடிய இந்த செயற்குழுக் கூட்டத்துக்கு எல்லா கிராம கமிட்டிகளுக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை.

முற்றுகைப் போர் இருக்கட்டும். ஆனால் வட்டாரத் தலைவரை மாவட்டத் தலைவர் நீக்கக் கூடாது என்று மாநிலத் தலைவர் பழனியாண்டி உத்தரவிட்டிருப்பதை அவர்கள் மறந்து விட்டார்களா?

குடந்தை தலைவர் அமிர்தகணேசனை 16 நாட்கள் அவர்கள் (துளசி அய்யாவாண்டையார்) நீக்கி வைத்தனர். அதை, அடுத்த 4 நாட்களில் மாநிலத் தலைவர் பழனியாண்டி ரத்துச் செய்து அறிவித்தாரே, அதை மறந்துவிட்டார்களா?.

இந்த நிலையிலும் இப்படி மீண்டும் பாபநாசம் வட்டாரத் தலைவர் கிருஷ்ணமூர்த்தியை அவர்கள் நீக்கியது தவறு.

எனவே வட்டாரத் தலைவராக இன்னும் கிருஷ்ணமூர்த்தியே நீடிக்கிறார் என்பதே உண்மை. புதிய நியமனம் செல்லுபடியாகாத ஒன்று.

இவர்களின் இந்த நடவடிக்கைகளைக் கவனித்து மேலிடம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

(ல–10)

## போஷாக்கு குறையும்போது நோய் எம்மை அணுகுகிறது

### வளர்ந்தோர் கல்வி அதிகாரி விளக்கம்

## கோப்பாய் இலுப்பையடி பிள்ளையார் தேர்

பளை, ஜூன் 27

கோப்பாய் வடக்கு அருள்மிகு ஸ்ரீ இலுப்பையடிப் பிள்ளையார் கோவில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று 27ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

இவ்விழாவில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர், சட்டத்தரணி திரு. சதாலோகேஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றுவார்கள்.

(ல–239)

## மீண்டும் இயங்கும்

சித்தன்கேணி, ஜூன் 26


யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அடுத்த ஆண்டு முதல் மீண்டும் இயங்கும்.

இதற்கான அனுமதியை கூட்டுறவு ஆணையாளர் வழங்கி இருக்கிறார்.

யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி இந்த ஆண்டு முதல் மூடப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதனை மீண்டும் திறக்கும்படி யாழ். தேசிய கூட்டுறவுச் சபை கோரிக்கை விடுத்திருந்தது.

(த–28)



வளர்ந்தோருக்கான அரபு மொழிப் போதனை வகுப்புக்களை முஸ்லிம் சமய, கலாசாரத் திணைக்களம் ஆரம்பித்திருக்கிறது. வகுப்பு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம். படத்தில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது, முஸ்லிம் சமய, கலாசார இயக்குநர் அல்ஹாஜ் எம். எம். அன்ஸார் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(ஊ–7)

## வளர்ந்தோருக்கான அரபு வகுப்புகள்

## செய்தித் திரட்டு

### புகார்

புத்தளம், ஜூன் 26

புத்தளம் பகுதியிலுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு 3 வருடங்களாக சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது.

சம்பள உயர்வு பற்றிய அறிவித்தல் உயர்பீடத்தில் இருந்து இவ் ஆசிரியர்களுக்கு வந்திருக்கின்றன. ஆனால், கல்விக் காரியாலயத்திற்கு இது பற்றிய எவ்வித அறிவுறுத்தல்களும் கிடைக்கவில்லையாம். இதனாலேயே சம்பள உயர்வு கிடைக்கவில்லையாம்.

(ல–241)

### தட்டுப்பாடு

கிளிநொச்சி, ஜூ 26

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் அலுவலகங்களில் தேசிய அடையாள கார்ட் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் இப்பகுதி இளைஞர் யுவதிகள் அடையாள கார்டு பெற முடியாமல் சிரமப்படுகிறார்கள்.

(ல–244)

### விளக்கவுரை

அக்மீமன, ஜூன் 26

காலி – கிந்தோட்டை முஹியதீன் ஜும்மா மஸ்ஜிதில் ரமழான் நோன்பு மாதத்தையொட்டி விஷேடபயான் சன்மார்க்க விளக்கவுரை நடத்தப்பட்டு வருகிறது.

தினமும் ளுஹர் தொழுகையின் பின்னர் நிகழும் இவ்வைபவத்தில், காத்தான்குடி அல் மத்ரஸதுல் பலாஹ் அரபிக் கலாசாலையின் விரிவுரையாளர் மௌலவி ஏ. ஜி. எம். அமீன் (பலாஹி) சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.

(ல–34)

### இலவச பாடசாலை

சித்தன்கேணி, ஜூன் 26

பண்டத்தரிப்பு கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினர், பண்டத்தரிப்பு பகுதி ஏழை மாணவர்களின் நலன்கருதி இலவச சிறுவர் பாடசாலை

இலங்கையில் பல காரியங்கள் செம்மையாக நடைபெறவில்லை என்று கண்டனம் தெரிவித்திருக்கிறது.

* ★ உற்பத்திக் குறைவு.
* ★ அரசாங்கத் துறையின் திருப்திகரமற்ற செயற்பாடு.
* ★ ஒவ்வொரு விஷயத்துக்கும் எவ்வளவு செலவாகும் என்பதை முன்கூட்டியே கணக்குப் பார்த்து அறிந்து கொள்ளாது இருத்தல்.
* ★ பணத்துக்கு திறைசேரியிலும் மற்றும் கூட்டுத்தாபனங்களிலும் நம்பியிருத்தல்.

இவை குறித்தே, இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

இலங்கையில் நஷ்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்கள்தான் குழுவின் வன்மையான கண்டனத்துக்கு இலக்காகி இருக்கின்றன.

நஷ்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்களுக்கு இலங்கை அரசாங்கம் பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்து கோடிக் கணக்கில் மானியம் வழங்கி வருமானால் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் அது உதைக்கும்.

நஷ்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்களைத் தனியார் நிர்வாகத்தில் விட வேண்டும் அல்லது அவற்றை மூடிவிட வேண்டும்.

கூட்டுத்தாபனங்களும் தனியார் துறை நிறுவனங்களும் ஆரோக்கியமான போட்டி அடிப்படையில் இயங்கினால் தான் பயன் கிடைக்கும் என்று இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகள் குழுத் தலைவர்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள்.

முந்திய அரசாங்கம் எடுத்ததற்கெல்லாம் கூட்டுத்தாபனங்களை அமைத்தது.

அதனால் அந்த அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்ற பிரமுகர்களும் சொந்தக்காரர்களும் பந்தக்காரர்களும் பதவி பெற்றார்கள். பணமும் சம்பாதித்தார்கள்.

இன்றைய அரசாங்கம் நஷ்டத்தில் இயங்கி வந்த சில தொழிற்சாலைகளைத் தனியாரிடம் ஒப்படைத்து விட்டது. அவை இப்போது இலாபத்தில் இயங்கி வருகின்றன.

ஏனையவற்றையும் தனியாரிடம் கையளிக்க ஏன் தாமதம்?

# வளர்ந்தோர் கல்வி அதிகாரி விளக்கம்

ஓட்டமாவடி, ஜூன் 26

"பிற மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாவட்ட பிள்ளைகள் போஷாக்கில்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். போஷாக்குத் தன்மை குறையும் போதுதான் நோய் எம்மை அணுகுகின்றது."

கல்குடாத் தொகுதி வளர்ந்தோர் கல்வியதிகாரி திரு. எப். ஆர். ருகல் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பிரிவினர் கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன், கல்குடாத் தொகுதி, தியாவட்டவான் கிராமத்தில் போஷாக்குக் கல்வி வகுப்புக்களை நடத்தி வருகின்றனர்.

திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. கே. தர்மலிங்கத்தினால் இவ்வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இவ்வகுப்புக்களில் விவசாயம், போஷாக்கு, நோய்த் தடுப்பு, சுகாதார பழக்க வழக்கங்கள், குடும்பத் திட்டம், பெற்றோர் கடமைகள், பாவனையாளர் சட்டவிதிகள் போன்றவை அவ்வத்துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களால் போதிக்கப்பட்டு வருகின்றன.

போஷாக்குக் கல்வி வகுப்புக்களின் அமைப்பாளராகக் கடமையாற்றும் கல்குடாத் தொகுதி வளர்ந்தோர் கல்வியதிகாரி திரு. எப். ஆர். ருகல், "தினபதி"க்கு பேட்டியளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"போஷாக்கு நிலை மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களின் படி ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் எமது மட்டக்களப்பு மாவட்ட பிள்ளைகளிடையே போஷாக்கின்மை மிகக் கூடுதலாகவேயிருக்கிறது.

உணவில் போஷாக்குத் தன்மை குறைவாக இருக்கும் காரணத்தினால் பிள்ளைகளின் தேக வளர்ச்சி குன்றுகிறது.

இந்த நிலை எமது நாட்டில் 12 மாதங்கட்கும் 23 மாதங்கட்குமிடைப்பட்ட குழந்தைகளிடையே பெரிதும் காணப்படுகிறது.

பாடசாலை செல்லும் பராயம் அடைவதற்கு முன்னர் 42% மான பிள்ளைகள் போஷாக்கின்மையால் பாதிப்படைந்திருக்கிறார்கள். எனவே தாய்மார் இவ்வகுப்புக்களில் கலந்து கொள்ள வேண்டியது அவசியம்.

சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகள், கிராம சுகாதார நிலையங்களில் ஏற்படும் இறப்புக்களில் 50 சதவீதமானவை குடல், சுவாச நோய்களினாலும், போஷாக்கின்மையாலுமே ஏற்படுகின்றன, என்பது மதிப்பீடுகளிலிருந்து தெரிய வருகின்றது.

தாயின் போஷாக்கின்மையே குழந்தைகள் பிறக்கும் போது நிறை குறைவாக இருப்பதற்குக் காரணம். கொழும்பு வைத்தியசாலைகளில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி 22 சத வீதமானவை தாயின் போஷாக்கின்மை காரணமாகவே நிறை குறைவாகப் பிறக்கின்றன, எனக் கூறப்படுகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டே திட்டமிடல் அமைச்சு இத்தகைய வகுப்புக்களை ஒழுங்கு செய்து வருகின்றது. இதற்கு முன் கல்குடாத் தொகுதியில் நாசிவன்தீவு, மீராவோடை ஆகிய கிராமங்களில் வகுப்புக்கள் நடத்தப்பட்டு மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

மூன்று மாத வகுப்புக்கள் முடிவில் கிராமங்களில் வீட்டுத் தோட்டப் போட்டி ஒன்று நடத்தத் திட்டமிடல் பிரிவினால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

போஷாக்குணவுப் பயிர்கள் எவ்வாறு தமது சொந்த நிலத்திலேயே பெற முடியும் எனும் விவசாய உத்தியோகத்தரின் கூற்றை பரீட்சித்து பார்க்க இவர்களுக்கு ஓர் சந்தர்ப்பம் வழங்கப்படும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ல-236)

# அரபு வகுப்புகள் அங்குரார்ப்பணம்.

கொழும்பு, ஜூன் 27

வளர்ந்தோருக்கான அரபு மொழிப் போதனா வகுப்புக்களை முஸ்லிம், சமய, கலாசார விவகாரத் திணைக்களம் ஆரம்பித்திருக்கிறது.

அரபு மொழியைப் பயில விரும்பும் எவரும் இந்த வகுப்பில் சேர்ந்து பயிலலாம்.

முஸ்லிம் சமய, கலாசார விவகாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர் ஒருவரே வகுப்புக்களை நடத்தி வருகிறார்.

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற முனைவோர் அரபு மொழியைப் பயில்வதில் அதிக சிரத்தை காட்டுகின்றனர்.

பிரஸ்தாப வகுப்புக்கள் சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்படும்.

வகுப்புக்களின் அங்குரார்ப்பண வைபவத்தில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது, முஸ்லிம் சமய, கலாசார இயக்குநர் அல்ஹாஜ் எம். எம். அன்வார், போக்குவரத்து அமைச்சின் இணைப்புச் செயலாளர் அல்ஹாஜ் ஜெம்ஸித் ஆரிப் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

முதலாவது வகுப்பில் சிங்கள மாணவர்கள் கூடுதலாகப் பங்கு பற்றினார்கள்.

(ண-7)

# புனித ரமழான் சிந்தனைகள்

நம்மிடையே நிழலிடும் நன்மை தரும் ரமழானின் ஒரு முக்கிய இரவு ஒன்று இருக்கிறது. புனித "லைலத்துல் கத்ர்" இரவுதான் அது. "லைலத்துல் கத்ர்" என்றால் மகத்தான இரவு அல்லது ஏற்பாட்டின் இரவு எனப் பொருள்படும்.

மனிதன் இவ்வுலகில் குறிப்பிட்ட ஒரு காலம்வரை மட்டுமே வாழ்கிறான். மனிதனின் நிலையான பெருவாழ்வு அவனது மரணத்தின் பின்னரே ஆரம்பமாகின்றது. நிலையான அந்த இன்ப வாழ்வுக்கு ஆயத்தஞ் செய்யும் ஒரு சாதனமாக லைலத்துல் கத்ர் வழங்கப்பட்டுள்ளது.

இக்கருத்தையே "லைலத்துல் கத்ர் — ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்தது", என்று மாமறையாம் அல்குர்ஆன் திருவாசகமும், மாநபி (ஸல்) அவர்களின் ஹதீஸும் வலியுறுத்துகின்றன.

லைலத்துல் கத்ர் என்ற இவ்விரவு அணு அணுவாய் அருள் நிரம்பியது. இவ்விரவில் தான் அருள் நிரம்பிய அமரர்களான மலக்குகள் விண்ணுலகில் இருந்து மண்ணுலகிற்கு இறங்கினார்கள். இத்தரணி மாந்தர் தாம் இழைத்திட்ட தவறுகளை எண்ணி எண்ணி மனம் வருந்தி, கண்ணீர் உகுத்தி, அல்லாஹ்வின் பக்கம் திரும்பி விடுவார் [illegible] மன்னிப்பை வேண்டி நிற்கிறார்கள்.

எவர் எவர் இவ்விரவின் மகத்துவத்தை பெறும் பொருட்டு, கலப்பற்ற எண்ணத்துடன் இறைவனைத் தொழுகின்றார்களோ, அவர்களுடைய முற்பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. அவ்விரவில் வருஷிக்கப் பெறுகின்ற ஆத்மீகப் பேரொளி அவர்களுடைய உள்ளங்களிலும் பிரகாசித்து விடுகின்றது.

"எவனிடத்தில் புண்ணிய மிக்க இவ்விரவு வந்து அவ்விரவின் பாக்கியத்தை அடையத் தவறி விட்டானோ, அவர் சர்வ பாக்கியத்தையும் இழந்தவனாவான்" என்று நபிகள் திலகம் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நவின்றபோது, சஹாபாப் பெருமக்கள், "யாரஸூல்லாஹ் லைலத்துல் கத்ர் என்ற மகத்துவ மிக்க இரவின் பாக்கியத்தை இழந்து நிற்பவன் யார்?" என வினவினார்கள்.

அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "தன்னுடைய தவறுகளை திருத்திக் கொள்ளும் தூய்மையான எண்ணம் கொள்ளாதவன், தொடர்ந்து தாய் தந்தையருக்கு துன்பம் கொடுப்பவன், உறவினர்களை ஆதரித்து நடக்காதவன், மது அருந்துபவன், விபச்சாரம் புரிபவன் ஆகியோர்" என [illegible]

அவனியோர்க்கு நேர்வழி காட்டும் வான் மறையாம் திருக்குர்ஆன் அருளப்பட்டதால் இவ்விரவில் திருக்குர்ஆனை அதிக மதிகம் ஓத வேண்டும். அதன் வழி நின்று இத்தரணி மக்களுக்கு அரும்பணி ஆற்றும் பேராற்றலை தரும்படி அல்லாஹ்விடம் வேண்ட வேண்டும்.

மனித வர்க்கத்தின் சஞ்சலங்களை அகற்றி, பூரண அமைதியும் சாந்தியும் வருஷிக்கும் இவ்விரவில் அல்லாஹ்வின் பேரருளைப் பெற முயல வேண்டும். இறை பணிகளையும் மக்கள் பணிகளையும் புரிந்து வருவதற்கு பேராற்றலை தருமாறும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும். அத்துடன் கடமைகளையும், வணக்கங்களையும் புறக்கணித்து நிற்கின்ற மக்களுக்கு நல்வழி காட்டுமாறும் துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ்வின் அனுக்கிரகத்தைப் பெறுகின்ற இவ்விரவு புனித ரமழானின் கடைசிப்பத்தில் ஒற்றை இரவுகளில் ஒரு தினத்தில் வரும் என ஹதீஸ் ஷரீபில் கூறப்பட்டுள்ளது. ஒற்றை இரவுகளில் மேற்படி எமது துஆக்களையும் அமல்களையும் அதிகரித்து, லைலத்துல் கத்ர் இரவின் பாக்கியங்களை பெற முயல்வோமாக! (ஆமீன்).

(11)

ஆல் [illegible] சங்கத்தினர், பண்டத்தரிப்பு பகுதி ஏழை மாணவர்களின் நலன்கருதி இலவச சிறுவர் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறது.

இதற்கான கட்டடம் 10 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. எஸ். இரத்தினவேல் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

(ல-283)

## நிலையம்

பண்டாரவளை, ஜூன் 26

அப்புத்தளை, கொஸ்லாந்தை நகரில் பால் சேகரிக்கும் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.

இது தற்காலிக கட்டடமொன்றிலேயே திறந்து வைக்கப்பட்டது.

சுதேச வைத்தியத்துறை அமைச்சரும், அப்புத்தளை எம். பியுமான திரு. டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார அண்மையில் இதனைத் திறந்து வைத்தார்.

(ல-39)

## பெயர்மாற்றம்

வவுணதீவு, ஜூன் 26

மட்டக்களப்பு காத்தான்குடி 6ஆம் குறிச்சி முஸ்லிம் கலவன் பாடசாலை, மீரா மகளிர் வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கிராம அபிவிருத்திப் பிரதி அமைச்சர் டாக்டர் பரீத் மீரா லெவ்வையின் சிபார்சின் பேரிலேயே மேற்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

(ல—318)

## நாகபூஷணி அம்மன் உற்சவம்

சித்தன்கேணி, ஜூன் 26

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்களுக்கு நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை 11 புதன்கிழமை தேர்த் திருவிழாவும், 12 வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 13 வெள்ளிக்கிழமை தெப்பத் திருவிழாவும் இங்கு நடைபெறும்.

இவ் உற்சவ காலங்களில் இங்கு வருகை தரும் யாத்திரீகர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து, சுகாதாரப் பாதுகாப்பு, குடிதண்ணீர் வசதி [illegible]

(ல—283)

## பயங்கரவாத...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்திய பேச்சுவார்த்தையின்போது இந்த விவகாரம் பற்றி பிரஸ்தாபித்திருந்தேன் என்றும் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன கூறினார்.

பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரெட் தாட்சரை புதன்கிழமை சந்திக்கும்போதும் இந்த விவகாரத்தை எழுப்புவேன். இலங்கை தனித்து பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராட முடியாது. கெரில்லாக்களுக்கு எதிராகப் போராட ஐ. நா. அமைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தன சொன்னார்.

இதற்கிடையில் பிரிட்டனில் உள்ள இலங்கைத் தமிழர்கள் லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக திங்கட்கிழமை இரவு கூடி அமைதியான முறையில் [illegible]

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கும், ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவின் பிரிட்டிஷ் விஜயத்துக்கும் இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பிரிட்டிஷ் பிரமர் தாட்சருக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்றில், இலங்கையில் தமிழரை நசுக்குவதற்காக திரு. ஜெயவர்த்தன மேற்கு நாடுகளின் உதவியைக் கோருகிறார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து தமக்கு புகார்கள் கிடைத்துள்ளன என்று சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

கெரில்லாக்களின் தாக்குதல்களுக்கு பழி வாங்கு முகமாக ஆயுதப் படையினர் குடிமக்களைக் கொலை செய்கின்றனர் என்று அறிக்கையில் தெரிவிக்கப் [illegible]

# பஞ்சாப்பில் மீண்டும் வன்செயல்கள்

## அஸ்ஸாமிலும் பம்பாயிலும் இனக் கலவரங்கள் தலைதூக்கின

புதுடில்லி, ஜூன் 26

**பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய தீவிரவாதிகளால் நேற்று இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் ஒரு தந்தையும் அவரது மகனும் எனக் கூறப்படுகிறது. இதே வேளை அஸ்ஸாமிலும், வர்த்தக நகரமான பம்பாயிலும் இனக்கலவரங்கள் வெடித்துள்ளன.**

பம்பாய் நகரின் சேரிப் பகுதிகளுக்கு துருப்பினர் அனுப்பிவைக்கப்பட்டனர். இந்து முஸ்லிம் இனக் கலவரம் ஏற்படுவதைத் தடுக்குமுகமாக பலர் கைது செய்யப்பட்டனர்.

இந்து போராட்ட இயக்கமான சிவசேனையைச் சேர்ந்த 50 பேர் கைது செய்யப்பட்டதாக பொலீஸ் அறிவித்தது. இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான மதுகர் சர்பொட்டாரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குகிறார்.

முஸ்லிம்களுக்கு எதிராக சிவசேனை அங்கத்தினர்களை இவர் பகிரங்கமாக தூண்டிவிட்டார். இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இவரைக் காவலில் வைக்க வேண்டியிருந்ததாக பொலீஸ் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

அஸ்ஸாமில் இடம் பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஏறக்குறைய 12 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது. அங்கு வெளியூர் குடியேற்ற வாசிகள் பிரச்சினைக்கு அரசாங்கம் சீக்கிரம் தீர்வு காணவேண்டுமென மாணவர்கள் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

இப் போராட்டங்களின் போது ரயில் தண்டவாளங்களைச் சேதப்படுத்தவும், தீ வைப்புச் சம்பவங்களையும் மேற்கொள்ள முயற்சிகள் செய்யப்பட்டன.

வெளியூர் குடியேற்ற வாசிகளை, முக்கியமாக வங்காள தேசத்து முஸ்லிம்களை அஸ்ஸாமிலிருந்து வெளியேற்ற வேண்டுமென அஸ்ஸாமியர்கள் கடந்த வருடம் நடத்திய போராட்டத்தின் போது பெரும் இரத்தக் களரி ஏற்பட்டது. இதில் 5000 பேர் வரை உயிரிழந்தனர்.

பஞ்சாப் குழப்பங்களின் போது இந்தப் போராட்டம் செயலற்றிருந்தது. ஆனல் இயக்கத்தின் தலைவர் தற்போது போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பஞ்சாப்பில் பல இடங்களில் சீக்கியத் தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

குர்டஸ்பூரில் இடம் பெற்ற குண்டு வீச்சுச் சம்பவமொன்றில் 3 மாத பெண்குழந்தையொன்று மரணமானது. மற்றுமொரு சம்பவத்தில் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்த சீக்கிய தீவிரவாதிகள் நான்கு பேர் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டனர். இதில் மூவர் காயமுற்றனர்.

பஞ்சாப்பில் துருப்பினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே இடம் பெற்ற துப்பாக்கிச் சண்டையொன்றில் 6 பேர் இறந்தனர்.

மற்றுமொரு சம்பவத்தில் தீவிரவாதிகளால் இந்து பத்திரிகையாசிரியர் ஒருவரின் மீது இடம் பெற்ற கொலை எத்தனிப்பு முயற்சி தோல்வியுற்றது.

அஸ்வின் மின்னு என்ற இந்தப் பத்திரிகையாசிரியரின் மெய்க் காப்பாளர்கள் இந்த கொலை முயற்சியை முறியடித்தனர்.

இந்தப் பத்திரிகையாசிரியரின் தந்தையும், பாட்டனரும் ஏற்கனவே தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை அந்நிய நாடான நேபாளத்தில் தீவிரவாதிகள் நுழையலாமென்பதால், தலைநகரான காட்மண்டுவில் பொலீஸ் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொற்கோயில் முற்றுகையின் பின் 150 தீவிரவாத சந்தேக நபர்கள் காட்மண்டுவில் நுழைந்துள்ளனர் என காட்மண்டு வாரப் பத்திரிகையொன்று கூறியுள்ளது. (ந)

## பஸ் விபத்தில் 29 பேர் மரணம்

நய்ரோபி, ஜூன் 26

டான்ஸானியாவில் இடம் பெற்ற பஸ் விபத்தொன்றில் 29 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காயமுற்றனர்.

காயமுற்றோரில் 5 பேரின் நிலைமை மோசமாக உள்ளதாக டான்ஸானியா வானெலி அறிவித்தது. (ந)



மேற்கு ஜெர்மனியின் புதிய ஜனதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரிச்சர்ட் வோன் விஸாகர் தனது மனைவியுடன் படத்தில் காணப்படுகிறார். ஜூலை மாதம் 1 ஆம் திகதி முதல் இவர் ஜனதிபதி பதவியை வகிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## 400 பேர் மரணம்

மத்திய ரஷ்யாவில் இம் மாதம் முற்பகுதியில் இடம்பெற்ற பயங்கர சூருவளிக் காற்றினல் 400 பேருக்கு மேல் கொல்லப்பட்டதாக நம்பப் படுகிறது.

மாஸ்கோவிலுள்ள ராஜதந்திர வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. (ந)

ஒலிம்பிக் போட்டிகளில்

## துருக்கிய அணிக்கு உதவி செய்வோர் தாக்கப்படுவர்

### ஆர்மேனிய கெரில்லாக்கள் கடித மூலம் எச்சரிக்கை

பாரீஸ், ஜூன் 26

அடுத்த மாதம் நடைபெறும் லொஸ் ஏஞ்ஜல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின் போது துருக்கிய அணிக்கு உதவி செய்யும் அரசாங்கங்கள், இயக்கங்கள், கம்பெனிகள் ஆகியவைமீது தாக்குதல் நடத்தப்படும். இவ்வாறு ஆர்மேனிய கெரில்லாக்கள் எச்சரிக்கைக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

இதற்கு முன்னரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், இம்முறையும் அங்கு நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளின் போது துருக்கிய அணிக்கு உதவி செய்யும் இயக்கங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுமென கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1915 இல் துருக்கியில் 15 லட்சம் ஆர்மேனியர்கள் படுகொலை செய்யப்பட்ட காரணத்துக்காகவே உலகம் முழுவதும் உள்ள துருக்கிய கேந்திரங்கள் பழிவாங்கப் படுவதாக ... அர்

## உலகச் செய்திகள்

## ஈராக்கின்

## வியட்நாமை விட்டு வெளியேறுபவர்களை அமெ. அதிகளவில் குடியேற்றவேண்டும்

ஹோ சி மின் நகர், ஜூன் 26

வியட்நாமை விட்டு வெளியேற விரும்பும் மக்களை அமெரிக்கா அதிக அளவில் குடியேற்ற வேண்டுமென வியட்நாமிய அதிகாரி ஒருவர் கூறினர்.

நியாயமான முறையில் நாட்டை விட்டு வெளியேறும் ... வில் குடியேற்றப்பட வேண்டும் என வியட்நாம் எதிர்பார்க்கிறது.

அத்துடன் வியட்நாம் யுத்த காலத்தில் பிறந்த அமரேசியர்களை (அமெரிக்க — ஆசிய பெற்றோருக்குப் பிறந்தவர்கள்) அதிகளவில் அமெரிக்கா கையேற்க ... யில் இந்தோ சீன படகு மக்கள் அந்நிய நாடுகளில் ஆயிரக்கணக்கில் நுழையத் தொடங்கியதை அடுத்து முறையான பிரயாணத் திட்டம் 1979 இல் ஏற்படுத்தப் பட்டது.

1982 ஆம் ஆண்டு முதல் 1,100 அமரேசியர்களை அமெரிக்கா ...

# ஈராக்கின்
# வளைகுடா கப்பல் தாக்குதல்

## ஈரான் உறுதி செய்தது

பாஹ்ரேய்ன், ஜூன் 26

ஈரானின் பிரதான எண்ணெய் ஏற்றுத் துறையான கார்க் தீவின் அருகே கிரேக்க எண்ணெய்க் கப்பல் ஒன்றை ஈராக் தாக்கியதை ஈரான் நேற்று உறுதிப்படுத்தியது.

இத் தாக்குதலின் போது கப்பலில் தீப்பற்றியது. ஆனால் ஈரானின் தேசிய எண்ணெய்க் கம்பெனி தீயைக் கட்டுப்படுத்தியது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டது.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய கார்க் தீவில் தரித்து நின்ற கப்பல் ஒன்றின் மீது ஈராக் நடத்திய தாக்குதல் மிகவும் துணிகரமானதென ராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

இத் தாக்குதலின் பின் கார்க் தீவின் எண்ணெய்த்துறை சாதாரணமாக செயற்பட்டு வருவதாக எண்ணெய்த் தொழில் வட்டாரங்கள் கூறின.

45 மாதங்களுக்கு முன் வளைகுடா யுத்தம் ஆரம்பமானதிலிருந்து கார்க் தீவை முற்றுகையிட முடியாத ஒரு கோட்டையாக ஈரான் மாற்றியமைத்தது. இங்கு தரித்து நிற்கும் கப்பல்கள் மீது ஈராக்கிய விமானத் தாக்குதல் நடைபெறுவதைத் தவிர்க்கும் பாதுகாப்பு முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தாக்குதலின்போது ஏவுகணை எதிர்த் தாக்குதல்களுக்கு நேரம் போதாததினாலேயே தாக்குதல் இடம்பெற்றதென ராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான நிதியைப் பெற கார்க் தீவின் எண்ணெய் ஏற்றுமதியையே ஈரான் வெகுவாக நம்பியுள்ளது.

இந்தத் தீவு அழிக்கப்பட்டால் வளைகுடாவை மூடிவிடுவதாக ஈரான் அச்சுறுத்தியுள்ளது.

கம்யூனிஸ்ட் அல்லாத உலக எண்ணெய் பாவனையில் ஆறில் ஒரு பகுதி இவ்வழியாகவே கொண்டு செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ந)

டுமென வியட்நாமிய அதிகாரி ஒருவர் கூறினார்.

நியாயமான முறையில் நாட்டை விட்டு வெளியேறும் வியட்நாமியர்களுக்கு உதவி அளிக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் அதிகாரி ஒருவர் பத்திரிகையாளர்களிடம் உரையாற்றும் போது இதனைக் கூறினார். தற்போது நடைமுறையில் உள்ள மாதத்துக்கு 1,000 பேர் என்ற அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என அவர் கூறினார்.

ஒரு மாதத்தில் 3,000 முதல் 4,000 பேர் வரை அமெரிக்கா களை (அமெரிக்க — ஆசிய பெற்றோருக்குப் பிறந்தவர்கள்) அதிகளவில் அமெரிக்கா கையேற்க வேண்டுமென அவர் கூறினார்.

முறையான பிரயாணத் திட்டத்தின் கீழ் கையேற்கப்படும் வியட்நாமியர்களுடன் இந்த மாதம் மேலதிகமாக மேலும் 200 அமரேசிய சிறுவர்களைக் கையேற்க அமெரிக்கா சம்மதித்துள்ளது. இவர்கள் இந்த வாரம் பாங்கொக்குக்கு புறப்படுவார்கள் என அவர் கூறினார்.

1970 ஆம் ஆண்டின் பிற்பகுதி பட்டது.

1982 ஆம் ஆண்டு முதல் 1,100 அமரேசியர்களை அமெரிக்கா கையேற்றுள்ளது. அந்த ஆண்டு முதல் முறையான பிரயாணத் திட்டத்தின் கீழ் அமரேசியர்கள் நாட்டை விட்டு நியாயமான முறையில் வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

வியட்நாமில் 20,000 அமரேசிய சிறுவர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் அங்கு ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருதப்படுகின்றனர்.

(ந)

## வெள்ளத்தினால் 44 பேர் மரணம்

டாக்கா, ஜூன் 26

வங்காள தேசத்தில் மேலும் 10 பேர் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்தனர். கடந்த இரு வாரமாக வங்காள தேசத்தின் 11 மாவட்டங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை இத்துடன் 44 ஆக உயர்ந்துள்ளது.

ஜமுனா, பிரமபுத்திரா, காகோட் கதகளி ஆகிய நதிகள் பெருக்கெடுத்துள்ளன.

இதேவேளை எல்லைப்புறத்துக்கு அப்பால் இந்தியாவில் பெருக்கெடுத்துள்ள நதிகளின் வெள்ளோட்டம் வங்காள தேசத்தில் கோகாகோன் நகரத்தை மூழ்கடித்துள்ளது. வீடுகள், பாடசாலை, சந்தை வெளி ஆகியவை முற்றிலும் நீரினால் மூழ்கியுள்ளன.

(ந)

# பயங்கரமான ஈரானிய பதில் தாக்குதல்

## அமெ. பாதுகாப்பு அமைச்சர் வையின் பேர்கர் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூன் 26

வெகு காலமாக எதிர்பார்க்கப்படும் ஈராக்குக்கு எதிரான பதில் தாக்குதலை ஈரான் சிக்கிரத்தில் மேற்கொள்ளும். முதலாம் உலக யுத்தத்தின் பின் ஏற்படும் பயங்கரமான தரைச் சண்டையாக இது மாறலாம்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கெஸ்பர் வையின் பேர்கன் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இரு பகுதியினரும் எல்லைப் புறத்தில் தலா 5 லட்சம் வீரர்களை நிறுத்தியுள்ளன. யுத்தம் நிறுத்தப்படுவதற்கான எவ்வித அறிகுறியும் தென்படவில்லை என அவர் கூறினார்.

ஏராளமான சிறுவர்கள் (ஈரானின் புரட்சிக் காவலர்கள்) இதில் சம்பந்தப்படுவது பயங்கரமானதென அவர் கூறினார். சிறுவர்களை அதிக அளவில் தனது படைகளில் ஈரான் சேர்த்துக் கொண்டுள்ளது.

ஈரானின் கோக்கைகள் முட்டாள்தனமானவை. எந்த நாடும் இந்தக் கோரிக்கைகளுக்கு சம்மதிக்க முடியாது.

ஈரான் தனது துருப்புகளைத் திருப்பி அழைத்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளது. திருப்பி அழைத்தால் அவர்களுக்குக் கொடுப்பதற்குத் தொழில்கள் இல்லாத நிலையில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் அவர்கள் ஈடுபட நேரிடும். இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

(ந)

## விமான நிலையத்தை திறப்பதற்காக வேலை நிறுத்தம்

பெய்ரூட், ஜூன் 26

பெப்ரவரி 6 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையத்தை மீண்டும் திறக்குமாறு கோரி பெய்ரூட் விமான நிலைய ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

லெபனன் இராணுவத்தினருக்கும் முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே நடைபெற்ற யுத்தத்தின் போது, 4½ மாதத்திற்கு முன் விமான நிலையம் மூடப்பட்டது. (ந)

கைக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

பாரிஸிலுள்ள செய்தி ஸ்தாபனமொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதமொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்மேனிய விடுதலையின் ஆர்மேனிய இரகசிய இராணுவம் என இக் கடிதத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆர்மேனிய கெரில்லா பிரிவுகளில் இந்த இயக்கம் முன்னணி வகிக்கிறது.

உலகம் முழுவதும் உள்ள துருக்கிய கேந்திரங்களில் கடந்த பத்து வருடமாக இப்பிரிவினர் தாக்குதல்களை நடத்தி வந்துள்ளனர். இத்தாக்குதல்களில் சுமார் 40 துருக்கியர்களும் ஏராளமான வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த இயக்கத்தின் கமாண்டோக்கள் லொஸ் ஏஞ்சல்ஸில் துக்காகவே உலகம் முழுவதும் உள்ள துருக்கிய கேந்திரங்கள் பழிவாங்கப் படுவதாக ஆர்மேனிய கெரில்லாக்கள் கூறி வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டை துருக்கி மறுத்து வந்துள்ளது.

1973 இல் லொஸ் ஏஞ்ஜலஸில் துருக்கிய கவுன்ஸிலரும் அவரது உதவியாளரும் கொலை செய்யப்பட்டனர். 78 வயதான ஆர்மேனியர் ஒருவர் தனித்து நின்றே இந்தக் கொலையைச் செய்தது குறிப்பிடத்தக்கது.

(ந)

## வேலை நிறுத்த முடிவுக்கான பிரேரணைகள்

பொன், ஜூன் 26

மேற்கு ஜெர்மனியின் உலோகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சமாதான பிரேரணைகளை உலோகத் தொழிலாளர் சங்கமும், பொறியியற் தொழிலின் அதிபர்களும் எடுத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மேற்கு ஜெர்மனியின் வரலாற்றில் இந்த வேலைநிறுத்தம் மிகவும் மோசமான தொழில் பிணக்காக கருதப்படுகிறது.

(ந)

## "வீடியோ டெக்" பொலீஸ்வலையில்

தலைமன்னார், ஜூன் 26

தலைமன்னார் கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கிய "வீடியோ டெக்"குகள் சிலவற்றை மீனவர்களிடமிருந்து தலைமன்னார் பொலீஸார் கைப்பற்றினர்.

தலைமன்னார்துறைப் பகுதியில் மீன் பிடித்து வரும் மீனவர்கள் கடற்கரையில் கண்டு எடுத்த டெக்குகளை மறைத்து வைத்திருந்தனர்.

இந்தியாவுக்குக் கடத்திச் செல்லப்படுகையில் கடலில் வீசப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் மேற்படி "வீடியோ டெக்"குகளை, தலைமன்னார் துறை பொலீஸ் பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் தலைமையிலான பொலீஸ் கோஷ்டி மீனவர்களிடமிருந்து கைப்பற்றியது.

சந்தேக நபர்களை பொலீஸார் தலைமன்னார் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். வீடியோ டெக்குகளும் சுங்க அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன. (எ—286)

சர்வதேச

# பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டுக்கு டாஸ் கண்டனம்

மாஸ்கோ, ஜூன் 26

சர்வதேச பயங்கரவாதத்தைப் பற்றி வாஷிங்டனில் நடைபெற்று வரும் மாநாட்டுக்கு ரஷ்ய செய்தி நிறுவனமான டாஸ் கண்டனம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் உலக ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு மேற்கு நாடுகளை ஈடுபடுத்திக் கொள்வதே இதன் நோக்கமென டாஸ் கூறியது.

இந்தக் கூட்டத்தில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் சூல்ஸ் ஆற்றிய உரைக்கும் டாஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்த உரையில் ரஷ்யாவையும், பல மூன்றும் உலக நாடுகளையும் அவர் தாக்கியதாக அது கூறியது.

தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னரே பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவது குறித்து மேற்கு நாடுகள் ஆராய வேண்டுமென சூல்ட்ஸ் மாநாட்டில் கூறியிருந்தார்.

அமெரிக்காவினால் ஏற்றுக் கொள்ள முடியாத கொள்கைகளை உடைய நாடுகளின் மீது அமெரிக்கா தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதையே இது காட்டுகிறதென டாஸ் கூறியது.

தனது உரையின் போது லிபியா, சிரியா, வட கொரியா, ஆகிய நாடுகள் பயங்கரவாதம் பரவுவதற்கு காரணமாக இருப்பதாகவும், உலகில் ஸ்திர நிலையை ஏற்படுத்த இந்த கெரில்லாக்களுக்கு ரஷ்யா ஆதரவு அளிப்பதாகவும் சூல்ட்ஸ் கூறியிருந்தார்.

மூன்றும் உலக இயக்கங்களுக்கு ரஷ்யா ஆதரவு அளிப்பதால் அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்கையை மூன்றும் மண்டல நாடுகளின் மீது திணிப்பதற்கு முடியாமல் இருப்பதால் அமெரிக்கா கோபமுற்றிருப்பதை அவரது கருத்துகள் மூலம் காணக் கூடியதாக இருப்பதாக டாஸ் மேலும் கூறியது.

வாஷிங்டன் மாநாட்டில் நேச நாடுகளுடன் ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும் கலந்து கொண்டுள்ளன.

(ந)

நீண்ட காலம் உழைக்கும் இரட்டை போல் பெயாரிங்ஸ்

ஊஷா சீலிங் மின் விசிறிகள்

140 செ. மீ. (56") ரூபா. 1475/-

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு.

ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்

88A, மெயின் வீதி, கொழும்பு-11.

தொலைபேசி: 25060—26643

## மக்களும் பதவியும்

### சமாதான நீதிவான்

வாழைச்சேனை, ஜூன் 26



வாழைச்சேனை ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜனப் ஏ. யாசீன் வாவா ஹாஜியார், சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் வாழைச்சேனை முகையதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உபதலைவராகப் பணிபுரிந்துள்ளார்.

இவர் வாழைச்சேனை மீன்பிடிச் சங்கத்தில் இயக்குநராகவும், கிராமோதய சபைத் தலைவராகவும், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினராகவும் பணிபுரிந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ—319)

### வெளிநாட்டில் ஆலோசகராக நியமனம்



இலங்கை கடல் கடந்த சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தரான அல்ஹாஜ் வை. எல். எம். ஸவாஹிர், டாக்காவில் (வங்காள தேசம்) உள்ள இலங்கைத் தூதரக ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தற்போது வெளிவிவகார அமைச்சில், தென் கிழக்காசிய மத்திய கிழக்குப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராகப் பணிபுரியும் ஜனப் ஸவாஹிர் இதற்கு முன்னர்,

செய்ரோவில் (எகிப்து) உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் இரண்டாவது செயலாளராகவும், லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் முதலாவது செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

அல்ஹாஜ் ஸவாஹிர் எதிர் வரும் ஜூலை மாதம் முதலாம்

ரூபவாஹினி நிகழ்ச்சிகளை தெளிவாக்க

# நமுனுகுலவில் ஒளி, ஒலி விஸ்தரிப்பு நிலையம் திறப்பு

அப்புத்தளை, ஜூன் 26

பதுளை மாவட்டத்தில் "ரூபவாஹினி" நிகழ்ச்சிகளை மிகத் தெளிவாகக் கண்டுகளிக்க வசதி செய்து கொடுக்கப் படவிருக்கிறது.

இதற்கென நமுனுகுலவில் "ஒளி — ஒலி விஸ்தரிப்பு நிலையம்" ஒன்றினை நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.


ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் இந்நிலையம் அமைக்கப்படும்.

நமுனுகுலயில் அமைக்கப்படவிருக்கும் ஒலி — ஒளி விஸ்தரிப்பு நிலையத்தினை நிர்மாணிப்பதற்கென ஜப்பான் அரசாங்கம் 15 கோடி ரூபாவை நிதி உதவியாக வழங்கும்.

தற்போது ரூபவாஹினி நிகழ்ச்சிகளை தாழ்ந்த ஊவாப் பகுதிகள், கொஸ்லந்தை, ஹல்துமுல்ல, பதுளுபிட்டிய, நிக்கபொத்த ஆகிய இடங்களில் தெளிவாகக் காண முடியாதுள்ளது.

பிரஸ்தாப நிலையம் அமைக்கப்பட்டதும், நிகழ்ச்சிகளை மிகத் தெளிவாகக் காணக் கூடியதாயிருக்கும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

அப்புத்தளை, பண்டாரவளை, பதுளை, வெளிமடை, மொனறாகலை, வெள்ளவாய, ஊவாபரணகம, பிபிலை, வியலுவ ஆகிய இடங்களில் இருப்போரும் நமுனுகுலயில் அமையப் பெறவிருக்கும் ஒலி—ஒளி விஸ்தரிப்பு நிலையம் மூலம் பெரு நன்மையடைவார்கள். (எ—100)



அண்மையில் புத்தளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நிவாரணமாக தானியங்களும் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

புத்தளம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி நிதி திட்டமிடல் அமைச்சருமான அல்ஹாஜ் எம். எச். எம். நைனா மரிக்கார் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அரிசி, மா, சீனி, டின் மீன்களடங்கிய ஒரு பார்சலைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ–241)

[படம்: புத்தளம் தினபதி நிருபர் எம். ஏ. அஷ்ரப் அலி)

## மத்திய பணிமனை: செயற்பாடுகள் தீவிரமடைய வழி என்ன?

# லோவர் வீதியை விஸ்தரிக்க அ. சபையின் சலுகை தேவை

### பதுளை கூட்டத்தில் பிரேரணை

பதுளை, ஜூன் 26

பதுளையில் புதிய கடைகள் நிர்மாணிக்கப்படும் போதும், பழைய கடைகள் புனரமைப்புச் செய்யப்படும் போதும் இடவசதியின்மையால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. எனவே "நகர அபிவிருத்திச் சபை" அதன் சட்ட திட்டங்களை அமுல் நடத்தும் போது ஒரு சில சலுகைகள் வழங்க வேண்டும். அப்போது பதுளை லோவர் வீதியை விஸ்தரிக்க வசதியேற்படும்.

இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்று பதுளை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

பதுளை மாநகர சபையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி பிரேரணையை பதுளை நகர சபை முதல்வர் திரு. பேர்ஸி எஸ். கருணாதிலக்க சமர்ப்பித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:—

பதுளை லோவர் வதியை இரு பக்கங்களும் தலா ஆறு அடி விஸ்தரிப்பது என மாநகர சபை முன்னர் முடிவெடுத்திருந்தது.

அதன்படி கடைகள் உடைக்கப்பட்டு விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் நகர அபிவிருத்திச் சபையின் சில சட்ட திட்டங்களுக்கு அமைய கட்டடங்களை எழுப்ப முடியாது; வர்த்தகர்கள் அவதிப்படுகின்றனர்.

இது மாநகர சபை அங்கத்தவர்களுக்கும் ஒரு தலையிடியாக அமைந்திருக்கிறது.

இன்று பதுளை நகரம் ஒரு மயானத்தைப் போல் காட்சி அளிக்கிறது. எனவே நகர அபிவிருத்திச் சபை உடனடியாக அதன் சட்ட திட்டங்களை அமுல் நடத்தும் போது ஒரு சில சலுகைகளை வழங்க வேண்டும். அப்போது தான் நகரை நவீனமயப் படுத்த முடியும்.

இவ்வாறு திரு. பேர்ஸி கருணாதிலக்க கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. கே. விஜேதாஸ சொய்சா பேசும்போது கூறியதாவது:—

பதுளை நகரை நவீனமயப் படுத்துவது நகரசபை உறுப்பினர்களின் கடமையாகும். ஆனால் இன்று அவர்கள் ஒரு நடமாடும் பொம்மைகளாகி விட்டனர். இதனால் பாதிக்கப் படுபவர்கள் ஏழை வர்த்தகர்களே என்று தெரிவித்தார். திரு. எம். விமலதாஸா உட்பட மற்றும் பலர் பேசினர்.

இப்பிரேரணையின் பிரதிகளை உள்ளூராட்சி வீடமைப்புத் துறை அமைச்சருக்கும், பதுளை நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ—37)

# கிராம ஏழைகள் நலனில் அரசு அதிக அக்கறை காட்டுகின்றது

### அப்துல் மஜீத் பேச்சு

நிந்தவூர், ஜூன் 26

"எமது அரசாங்கம் கிராமப்புற ஏழைமக்களின் நல்வாழ்வுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றது. நிர்வாகத்தில் மக்களுக்கு உரிய இடமளித்து, தத்தமது பகுதிகளின் அபிவிருத்திகளுக்குத் தாமே முன்னின்று உழைக்கவும் அரசின் திட்டங்கள் வழி வகுத்திருக்கின்றன.

பிரதி தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறை எம். பியுமான ஜனப் எம். ஏ. அப்துல் மஜீத் மேற்கண்டவாறு கூறினார்.

அக்கரைப்பற்று பள்ளிக் குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட புதிய பாதை அமைக்கும் சிரமதான வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனப் ஐ. எல். ஏ மீரா லெவ்வை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பொத்துவில் முதலாவது எம். பி. ஜனப் எம். ஐ- உதுமா லெவ்வை கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதி அமைச்சர் ஜனப் அப்துல் மஜீத் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"இந்த நாட்டில் முன்பு ஆட்சி பீடம் ஏறிய எந்த அரசாங்கமும் செய்யாத பல்வேறு அபிவிருத்திகளையும் எமது அரசாங்கம் செய்து வருகின்றது.

குறிப்பாக பின் தங்கிய கிராமங்களையும், ஏழை மக்களையும் முன்னேற்றுவதற்கு அரசாங்கம் அளப்பரிய சேவைகளைச் செய்திருக்கிறது.

அரசாங்கம் புதிதாக ஏற்படுத்தியுள்ள கிராமோதய சபைகள் மூலம் நாம் மேலும் பல அபிவிருத்திகளை எமது பின் தங்கிய கிராமங்களில் ஏற்படுத்தலாம்.

இந்தக் கிராமத்தின் தேவை தொடர்பில் நான் எதிர் காலத்தில் உரிய பங்கினை அளிக்கத் தயங்க மாட்டேன்"

இவ்வாறு அவர் கூறினார். (எ–217)

### அட்டனில் தமிழ் தினவிழா

அட்டன், ஜூன் 26

அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியின் "கல்லூரி தின" விழாவும் தமிழ் தின விழாவும் எதிர்வரும் 29 ஆம் திகதிவெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் விழாவிற்கு மாணவ மன்றத் தலைவர் திரு. என். சத்தியநாதன் தலைமை வகிப்பார்.

மேற்படி விழாவில் அட்டன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. இராஜகோபால், நுவரெலியா வட்டாரக் கல்வி அதிகாரி திரு. டி. வி- மாரிமுத்து, தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதம விரிவுரையாளர் திரு. காரை சுந்தரம் பிள்ளை ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவர். (எ–96)

கவும் பணியாற்றியிருக்கிறார்.

அல்ஹாஜ் ஸவாஹிர் எதிர் வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து டாக்காவில் பணி யாற்றுவார். (எ-8)

## நிர்வாகிகள்

ஓட்டமாவடி, ஜூன் 26

வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலை பிரயாணி கள் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம் வருமாறு:—

தலைவர்: திரு. ராஜன் நடராசா; உபதலைவர். திரு. என். கந்தசாமி, செயலாளர்: திரு. பி. கடாச்சம், (ரயில் பிரயாணிகள்), உப செயலாளர்: திரு. எல். கணேஷ் வரன் (பஸ் பிரயாணிகள்), பொருளாளர்: திரு. எப். என் மோசஸ், உப பொருளாளர்: திரு. எஸ். சிவலிங்கம்.

செயற்குழு உறுப்பினர்கள் திரு வாளர்கள் கே. பாலேந்திரா, எஸ். மகேந்திரன், ஏ. வி. ஆரியரட்ணம், என். பிரபாபதி, எஸ். ஏ. தியாகராஜா, ஜி. ஒக்கஸ், ஏ. பி. தேவராஜன், ஜி. மார்சுவீனே, திருமதி பி. வேலுப்பிள்ளை, செல்வி எஸ். சாமித்தம்பி. (எ-236)

★

மட்டக்களப்பு இந்து இளைஞர் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோ கத்தர்களாக பின்வரு வோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: திரு. ம. சிவநேச ராசா,

உபதலைவர்கள்: டாக்டர் வி. ஜெகநாதன்; திரு. கா. தங்க வடிவேல்,

பொதுச் செயலாளர்: திரு. இ. இரத்தினசிங்கம்.

உதவிச் செயலாளர். திரு. எஸ். தில்லைநாதன்

விளையாட்டுச் செயளாளர்: திரு. கே. சிவராஜ ரெத்தினம்.

கலாசாரச் செயளாளர்: திரு. த. செல்வநாயகம். சமூக சேவைச் செயலாளர்: திரு.வி. த. குமாரசாமி.

நிர்வாக சபை உறுப்பினர் கள்:—

டாக்டர் வி. சிவலிங்கம், திரு வாளர்கள் ரி. ஸ்ரீ. பத்மநாதன், இ. அரியநாயகம், ரி. பத்ம நாதன், எம். செல்வநாயகம், தி. புவிராஜசிங்கம், வி. சிவ கணேசன், கே. வி. எம். மாணிக்கவாசகர், இரா. நாக லிங்கம், கே. கார்த்திகேசு, கே. ஏ. சோமசுந்தரம், பெ. தருமலிங்கம், தி. பூபாலசிங்கம். (எ-318)

# தீவிரமடைய வழி என்ன?

## தொழிற் பிரமுகர் விளக்கம்

எட்டியாந்தோட்டை, ஜூன் 26

மாவட்டப் பணிமனைகள் தீவிரமாகச் செயல்படுமே யானால், மத்திய பணிமனை அதன் பணிகளை கிரமமாகச் செய்யும் என்பதில் ஐய மில்லை. மாவட்டப் பணி மனையின் உத்வேகத்தில் தான் மத்திய பணிமனையின் செயற்பாடுகள் தங்கியிருக் கின்றன.

இவ்வாறு ஜனநாயக தொழி லாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் திரு. வி. பி. கணே சன் கூறினார்.

எட்டியாந்தோட்டை மாவட் டப் பணிமனையில் நடைபெற்ற மாவட்டக் கமிட்டித் தேர்தல் கூட்டத்தில் அவர் உரையாற் றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகை யில் கூறியதாவது:

சங்கத்தின் வளர்ச்சி மாவட் டங்களில்தான் தங்கியிருக்கிறது. மாவட்டக் கமிட்டி அயராது உழைக்குமானால் சங்கம் தானு கவே வளர்ச்சி அடையும்.

நல்ல திட்டங்களுடன் செயல் பட்டு பிரச்சினைகளை விரைவில் தீர்க்கவும், தொழிலாளர்களை மாவட்டக் கமிட்டியில் அபி லாஷை கொள்ளவும், அங்கத்தி னர்களைப் பெருக்கவும் வழி வகுக்க வேண்டும்.

எட்டியாந்தோட்டை தொ. காவின் கோட்டை என்ற பெருமையை புதிய கமிட்டியும், ஏனைய உறுப்பினர்களும் நிலை நாட்ட வேண்டும். அங்குதான் மாவட்டத்தின் வளர்ச்சி தங்கியிருக்கிறது. ஜ. தொ. காவின் உயர்ச்சி தங்கியிருக் கின்றது.

மனிதனுகப் பிறந்தவன் தவறு செய்வது இயல்பு. அதையே மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது.

எனவே நடந்ததை மறந்து சகலரின் ஒத்துழைப்புடனும் சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடு பட முயல வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அதைத் தொடர்ந்து திருவா ளர்கள் ஏ. அம்மாசி பாலகிருஷ் ணன், ஆறுமுகம் இராமையா, நடேசன் ஆகியோரும் உரை யாற்றினார்கள். (எ-346)

## தையல் வகுப்பு ஆரம்பம்

இராகலை, ஜூன் 26

இலங்கை சமூக நிறுவ னத்தின் இராகலை அமைப் பாளர் திரு. எஸ். செல்வம் உடபுசல்லாவ, டலோஸ் தோட்டத்தில் அண்மையில் தையல் பயிற்சி வகுப்பு ஒன்றை ஆரம்பித்து வைத் தார்.

இங்குள்ள யுவதிகள் தங்களின் நேரத்தை வீணுக்கக் கூடாது. உங்களின் வசதிக்காகவே ஓய்வு நாட்களில் 3 மணித்தியாலங்க ளும் ஏனைய நாட்களில் ஒரு மணித்தியாலமும் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

இன்னும் ஒரு மாத காலத்தில் இங்கு பாலர் வகுப்பும் ஆரம் பிக்கப்பட இருக்கிறது.

இவ்வாறு திரு. செல்வம் அங்கு பேசும்போது கூறினார். (எ-265)

தார்.

நடத்தும் போது ஒரு சில சலு



தலைமன்னார் கிராமோதய சபையும், பனம் பொருள் அபி விருத்திச் சபையும் இணைந்து தலைமன்னார் தமிழ்க் கலவன் பாடசாலையில் பனம் பொருள் அபிவிருத்தி விழா ஒன்றை நடத் தின. இவ் விழாவை மன்னார் பிர தேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. பரமேஸ் வரன் குத்து விளக்கேற்றி ஆரம் பித்து வைக்கின்றார். தலைமன்னார் கிராமோதய சபைத் தலைவர் திரு. ஆர். வி- ராமசாமி, மன்னார் உதவி அர சாங்க அதிபர் திரு. ஏ- பாஸ்கர தாஸ், தலைமன்னார் விசேட சேவை அலுவலர் திரு. தோமஸ் மிராண்டா ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (எ-251)

# மட்டக்களப்பு

## வாவிக்கரை வீதியை புனரமைக்கக் கோரிக்கை

வவுணதீவு, ஜூன் 26

மட்டக்களப்பு வாவிக் கரை வீதி, கல்லடிப்பால இறக்கம் தொடக்கம் சிலாமுனை வரை புனர மைப்புச் செய்து விஸ்தரிக் கப்பட வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு கோட்டமுனை கிராமோதய சபையின் 1985 ஆம் ஆண்டு வேலைத் திட்டம் குறித்து ஆராயப்பட்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இச்சபை செயலிழந்து காணப் படுவதால் இப்பிரிவு விசேட சேவை அதிகாரி திரு. இரா. உதயச்சந்திரன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடை பெற்றது.

மேற்படி கூட்டத்தில் 1985 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைத் திட்டங்களை மேற்கொள்வ தென்று முடிவு செய்யப்பட்டது.

புனித திரேசா மகளிர் வித்தி யாலயம், சென் செபஸ்தியன் ஆண்கள் பாடசாலை என்பவற் றைப் புனரமைத்தல், தளவாட வசதி, மின்சார வசதி, விளை யாட்டு மைதான வசதிகள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்தல்,

சிங்கள மகா வித்தியாலயத் தில் நிலவும் தளவாடப் பற்றுக் குறையை நீக்குதல்,

சபைப் பகுதியில் அடங்கும் பாடசாலைகளுக்கு, அதிபர், ஆசிரி யர்களுக்கு விடுதி அமைத்தல்.

குடாக்கரை ஒழுங்கை வெயிலி வீதிவரை புனரமைப்புச் செய்து போக்குவரத்து வசதிகளை ஏற் படுத்துதல்.

இத்தீர்மானங்களை சபையின் செயலாளரான விசேட சேவை அதிகாரி திரு. இரா. உதய சந்தி ரன் மண்முனை வடக்கு பிர தேச சபைச் செயலாருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். (எ-318)

## ஆசிரிய நியமனத்தில் குளறுபடி ஏன்?

எட்டியாந்தோட்டை, ஜூன் 26

சுவீகரிக்கப்பட்ட தோட் டப் பாடசாலைகளுக்கு வழங்கப்படவிருக்கும் ஆசி ரியர் நியமனத்தில் பல குளறுபடிகள் நிலவுகின் றன. இதனால் இந்திய வம் சாவளியினரில் அநேகர் நியமனம் பெறும் வாய் ப்பை இழக்கலாம் எனக் கூறப்படுகிறது.

பரீட்சை எழுதிய பலருக்கும் தொண்டர் ஆசிரியர்களாகக் கட மையாற்றுவோரில் பெரும்பாலா னோருக்கும் நேர்முகப் பரீட்சைக் கான அழைப்புக் கடிதம் கிடைக் கவில்லையாம்.

கடிதங்கள் கிடைத்தோரில் சிலர் இருபத்தெட்டு வயதைப் பூர்த்தி செய்துள்ளமையால் நிய மனம் வழங்க மறுக்கப்பட்டிருப் பதாகவும் கூறப்படுகிறது. (எ-346)

## கல்விக்குழு நியமனம்

பண்டாரவளை, ஜூன் 26

தோட்டப் பகுதி மாண வர்களது கல்வி அபிவிருத் தியை நோக்கமாகக் கொண்டு "கல்வி அபிவி ருத்திக்குழு" வொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த தோண முட்டாவ தோட்டத்தில் இக்குழு அமைக் கப்பட்டிருக்கிறது.

இலங்கை தொழிலாளர் காங் கிரஸ் உதவிச் செயலாளர் திரு. என். எஸ். சகாதேவன் இதனைத் தெரிவித்தார். (எ-39)

## மின்திட்டம்

குருநாகல், ஜூன் 26

குருநாகல் கட்டுபொத்த நகரத்துக்கு ரூபா 32 லட் சம் செலவில் புதிதாக மின் திட்டம் ஒன்று ஆரம்பிக் கப்பட விருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளை கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜெயதிலக்க, வாரி யப்பொல எம். பி. திருமதி அமரா பியசீலி ரத்நாயக்க, பண்டுவஸ்நுவர எம். பி. ஆர். எம். கே. பி. ரத்நாயக்க மேற் கொண்டு வருகின்றனர். (எ-138)

கும் அனுப்பி வைக்க வேண் டும் எனவும் தீர்மானிக்கப்பட் டது. (எ—37)

களாகக் கலந்து கொண்டு சிறப் புரை ஆற்றுவர். (எ-96)

# பனை மரங்களை வெட்டுவதைத் தடுக்க சட்டம் கொண்டுவர வேண்டும்

## மன்னார் மேலதிக அரச அதிபர்

பேசாலை, ஜூன் 26

பனை மரங்களை வெட்டுவ தைத் தடை செய்ய சட்டம் கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு கூறினார் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனப் எம். எம். மக்பூல்-

தலைமன்னாரில் பனம் பொருள் அபிவிருத்தி விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இதை யொட்டி நடைபெற்ற கருத்தரங் கில் கலந்து கொண்டு மேலதிக அரசாங்க அதிபர் மக்பூல் உரை யாற்றினார்.

தலைமன்னார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இக்கருத் தரங்கு நடைபெற்றது

தொடர்ந்து பேசிய மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் மக்பூல் கூறியதாவது:-

பனையால் கிடைக்கும் பலன் எமது மூதாதையர் தொட்டுக் கிடைத்து வருகிறது.

மன்னார், தலைமன்னார் பகுதி களில் பனை மரங்கள் இயற்கையாகவே வளரும் சுவாத் தியம் உண்டு. பனையின் பயனைப் பெறுவதில் யாழ்ப்பாண மக்களுக்கும், மன் னார் பகுதி மக்களுக்கும் இடை யில் மலைக்கும், மடுவுக்குமுள்ள வித்தியாசம் உண்டு.

எமது வருவாயையும், மூல வளத்தையும் பெருக்குவதற்கு பனையை நல்ல முறையில் பாது காக்க வேண்டும்.

தலைமன்னார் பகுதியில் பனை வளம் வருடா வருடம் அதிக ரித்து வரும் வேளையில் கள்வாக பனை மரங்களை வெட்டி வெளி யூர்களுக்கு எடுத்துச் செல்வது கவலையைத் தருகிறது.

ஒரு மரத்தை வெட்டி அழிப் பது சுலபம் ஆனல் அதை வளர்ப்பது மிகவும் கடினமா கும்.

பனை மரங்கள் வெட்டுவதைத் தடை செய்யச் சட்டத்தில் இட மில்லை. ஆதலால் அதனைத் தடை செய்யக்கூடிய சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (எ-251)

# மொறவக்கபகுதி

## ஆசிரியர் பற்றுக்குறை விரைவில் தீரும்

வெலிகாமம், ஜூன் 26

மாத்தறைக் கல்வித் திணைக்களம் மொறவக்கக் கல்விப் பகுதி பாடசாலை களில் நிலவும் ஆசிரியர் பற் றுக் குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை களை எடுத்திருக்கிறது.

இதற்கமைய மாத்தறைக் கல்விப் பகுதியில் மேலதிகமா கப் பாடசாலைகளில் கடமை புரியும் சகல ஆசிரியர்களும் மொறவக்கக் கல்விப் பகுதிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட இருக்கின்றனர்.

ஆசிரியர்கள் பற்றுக் குறை காரணமாக ஏற்கனவே மொற வக்கப் பகுதியில் உள்ள மூன்று தமிழ் தோட்டப் பாடசாலைகள் மூடப்பட்டு விட்டன.

இங்கு தற்பொழுது விஞ்ஞா னம், கணிதம், ஆங்கிலம் சங்கீ தம் போன்ற பலதரப்பட்ட ஆசி ரியர்களுக்குப் பெரும் பற்றுக் குறை நிலவுகின்றது.

மொறவக்க பாடசாலைகளுக்கு கல்விச் சேவைகள் அமைச்சால் வழங்கப் பட்டிருக்கும் பெறுமதி வாய்ந்த பெருந் தொகையான உபகரணங் கள் ஆசிரியர்கள் இல்லாத கார ணத்தால் துருப்பிடிக்கும் நிலை யில் இருப்பதாகவும் அறிவிக்கப் படுகிறது.

மாத்தறைப் பகுதியில் இருந்து ஏற்கனவே ஆசிரியர்கள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டு விட் டனர்.

அடுத்த ஜூலை மாதம் முதல் ஏனைய ஆசிரியர்கள் மொறவக்கப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப் பட இருக்கின்றனர். (எ-331)

## வானொலி

27 — 6 — 1984

காலை —
5.30 நாதாஞ்சலி
5.35 தோத்திரமாலை
6.00 சைவநற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
7.00 பாட்டு – ஜோன் பி. ஹிக்கின்ஸ் பாகவதர்
7.30 மாகாணச் செய்திகள்
7.35 இசையமுதம்
8.15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்

மாலை —
6.00 செய்திகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 அருளமுதம்
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8.00 உலகச் செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 நாடகம் – "நாடகமே உலகம்" – ஜீ. பி. வேதநாயகம்
8.40 உதயமஞ்சரி
9.00 செய்திகள்
9.30 மெல்லிசைப்பாடல்
9.45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 நோ யுவர் கண்ட்ரீ
5.35 கிரேட் ஸ்பேஸ் கோஸ்டர்
6.00 நோ யுவர் பொடி
6.30 வாடைக்காற்று — உள்ளூர் தமிழ்த் திரைப் படம்.
6.55 செய்திகள் – தமிழ்
7.15 லைலத்துல் கத்ர்" முஸ்லிம் நிகழ்ச்சி
7.45 பியூசர் அட்ரக்சன்ஸ்
8.15 செய்திகள் – சிங்களம்
8.45 மிட் வீக் மூவி தோரி – சி – பெவாபி (உருது)
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.50 மிட் வீக் மூவி (தொடர்ச்சி)
10.30 உலகச் செய்திகள்
10.35 மிட் வீக் மூவி (தொடர்ச்சி)

### ஐ. டி. என்.

6.31 த இலக்ட்ரிக் கோ
7.00 சித்ர கித
7.30 மகாத்மா காந்தி
8.00 சர்பைவல்
8.30 த லூசிசோ
9.00 எவரி குயின்
9.30 செய்திகள் – ஆங்கிலம்

# விளையாட்டு நற்பண்புகளை வளர்க்கிறது

## வட்டார கல்வி அதிகாரி கூற்று

வவுணதிவு, ஜூன் 26

மாணவர்கள் மத்தியில் விளையாட்டுத் துறையின் மூலம்உருவாகும் ஒற்றுமை கட்டுப்பாடு, பொறுமை போன்ற நற்பண்புகள் அவர்களது எதிர்கால நல்வாழ்வுக்கு வழி காட்டியாக விளங்குகின்றன.

இவ்வாறு மட்டக்களப்பு நாவற்குடா தருமரத்தினம் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தெற்கு வட்டார கல்வி அதிகாரி திரு. சீ. மகேசுரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. இ. சங்கரப்பிள்ளை தலைமையில்நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

மாணவர் களிடையே விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதன் நோக்கம் பொழுது போக்குவதற்காக அல்ல.

மாணவர்களை சமூகத்தில் உடல் உளவிருத்தி கொண்டவர்களாக உருவாக்குவதற்காகவே.

மாணவர்கள் விளையாட்டுத் துறையில் தமது ஓய்வு நேரத்தை செலவு செய்வதால் அவர்களது உடல் உள்ளம் வளர்ச்சியடைந்து அவர்களது சிந்தனைகள் நல்ல வழியில் திரும்ப வழி பிறக்கிறது. என்றார். (318)

# விளையாட்டுப் பகுதி

## சாய்ந்தமருது

சாய்ந்தமருதில் நோன்புப் பெருநாள் தினத்தன்று இரவு மின்னொளியில் கரபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

சாய்ந்தமருது "டொல்பின்" விளையாட்டுக் கழகத்தின் மூன்றுவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்படி போட்டி நிகழ்ச்சி மிகப் பிரமாண்டமான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

சாய்ந்தமருது தாமரை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் இக் கரபந்தாட்டப் போட்டி நிகழ்ச்சிக்கு மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல முன்னணி விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்ளவிருக்கின்

## நோன்புப் பெருநாள்

### விளையாட்டு நிகழ்ச்சிகள்

தைப் பெறும் கழகத்திற்கு "சலீம்கான்ர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயமும், இரண்டாம் இடத்தைப் பெறும் கழகத்திற்கு "ஜெமீனுடெக்ஸ்" கேடயமும், மூன்றும் இடத்தைப் பெறும் கழகத்திற்கு "கொழும்பு கோல்ட் ஹவுஸ்" வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப் படும்.

பெறும் "டொல்பின்" கழகத்தின் மூன்றுண்டு நிறைவு விழாவிலும் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனை நாடா மன்ற உறுப்பினருமான ஜனாப் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் ஜனாப் எம். எச். எம். ஜவ்பார், கல்முனை பிரதேச சபைத் தலைவர் ஜனாப்

# வலைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில்

## கொழும்பு, கம்பஹா அணி

கொழும்பு, ஜூன் 27

கொழும்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பங்குபற்ற கொழும்பு அணியும், கம்பஹா அணியும் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரை இறுதிப் போட்டிகளில் கம்பஹா அணி குருநாகலை அணியை 45 – 18 புள்ளிகளால் தோற்கடித்து இறுதிப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றது.

அதற்கு முன் நடைபெற்ற கால் இறுதிப் போட்டிகளில் குருநாகலை அணி பதுளை அணியை 45 – 17 புள்ளிகளாலும், கம்பஹா அணி, கண்டி அணியை 46 – 22 புள்ளிகளாலும் தோற்கடித்திருந்தன.

இறுதிப் போட்டி ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி குருநாகலையில் நடைபெறும். (ந)



பண்டாரவளை ராசிக் பரீத் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

402 புள்ளிகளைப் பெற்ற ரூமி இல்லம் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பண்டாரவளை கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். எம். அப்துல் மஜீத், முதலாவது இடத்தைப் பெற்ற ரூமி இல்லத்தின் தலைவர் எம். ராபி ரபாய்தீனுக்கு வெற்றிக் கேடயத்தைப் பரிசளிப்பதைப் படத்தில் காண்க. (ந–39)

[படம்: ஜே. இஸ்ஸதீன்]

## யாழ். மாவட்ட உடற்பயிற்சி போட்டி இன்று

# இலங்கையில் ஜூடோ விளையாட்டு ஊக்குவிப்பு

கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் ஜூடோ விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதுவரின் இல்லத்தில் அண்மையில் வைபவ நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் போது பல ஜூடோ வீரர்கள் தரம் உயர்த்தப்பட்டதுடன், அநேக ஜூடோக் கழகங்களுக்கு ஜூடோ சீருடைகளை மேற்படி கழகங்கள் பயன்படுத்தும்.

இலங்கை ஜூடோ வீரர்கள் தூதுவரையும், அவரது பாரியாரையும் சந்தித்த போது கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்தே இந்த ஜூடோ சீருடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்த சீருடைகளை இங்கு உற்பத்தி செய்வது கஷ்டமானது என்பதையும், ஜூடோ விளையாட்டில் பயிற்சி பெற ஏராளமான விளையாட்டுப் பிரியர்கள்


## இன்றைய திரைகளில்

5-வதுவாரம்

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)

சரஸ்வதி
(திருமலை)
6-00 9-30.
10.30, 2.30, 6.00, 9.30

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த

ஒளி விளக்கு

(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)

8.00 சாவைவல
8.30 த ஹூசிசோ
9.00 எவரி குயின்
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.45 எலரி குயின்
(தொடர்ச்சி)

டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல முன்னணி விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்ளவிருக்கின்றன.

போட்டியில் முதலாம் இடத்

தினையும் பரிசாக வழங்கப்படும்.

பிரஸ்தாப போட்டி நிகழ்ச்சியிலும், அதன் பின்னர் நடை

ருத்தி சபைத் தலைவர் ஜனுப் எம். எச். எம். ஜவ்பார், கல்முனை பிரதேச சபைத் தலைவர் ஜனுப் அலியார் ஏ. அஸீஸ் ஆகியோரும் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

மேற்படி போட்டி நிகழ்ச்சிக்கான சகல ஏற்பாடுகளையும் கழகத் தலைவர் ஜனுப் எம். ஐ. எம். அஷ்ரப் எடுத்து வருகிறார்.

(ந-281)



போட்டிகளில் இரண்டாவதாக வருபவர்களுக்காக ஒரு போட்டியை ஏற்படுத்தினுல் நிச்சயம் மேற்கு ஜெர்மன் மெய்வல்லுன வீரரான, 24 வயதான ஹெரால்ட் சிமிட்டுக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

400 மீட்டர் தடைதாண்டி ஓடும் போட்டியில் இவர் பல வருடங்களாக அமெரிக்க வீரர் எட்வின் மோசசுக்கு இரண்டாவதாக வந்துள்ளார்.

ஆனுல் இந்தப் போட்டியில் ஐரோப்பிய சாம்பியனுக இவர் பல தடவை வெற்றி பெற்றுள்ளார்.

இப் போட்டி நிகழ்ச்சிக்கான இவரது சிறந்த நேரம் 47.48 விநாடிகளாகும். (ந˜ச)

## தலைமன்னர்

தலைமன்னர், ஜூலை 26

எதிர்வரும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு மன்னர் மூர்வீதி முஸ்லிம் இளைஞர் விளையாட்டுக் கழகம் கலை நிகழ்ச்சிகளை நடத்த தீர்மானித்துள்ளது.

இம்முறை கடந்த வருடத்தைவிட மிகவும் சிறப்பான முறையில் மேற்படி கலை நிகழ்ச்சிகள் அமையுமென கழகத்தின் செயலாளர் ஜனுப் எம். எல். ஜுனைதீன் தெரிவித்தார்.

(ந-286)

## வியாங்கொடை

வெயாங்கொடை, ஜூன் 26

எதிர்வரும் நோன்புப் பெருநாள் தினத்தன்று அத்தனகலைத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த கஹட்டோவிட்ட அல் - பத்ரிதியா மகா வித்தியாலய விளையாட்டரங்கில் மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்த கஹட்டோவிட்ட முஸ்லிம் நலன்புரிச் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

மரதன் ஓட்டம், மிக நீண்ட நேரத்துக்குச் சைக்கிள் சவாரி செய்தல், பல்வேறு- ஓட்டப் போட்டிகள் மெதுவான சைக்கிளோட்டம், தலையணைச் சமர், வழுக்கு மரம் ஏறல் கயிறு இழுத்தல், சைக்கிள் சங்கீதக் கதிரை விநோத உடைப் போட்டிகள் என்பன இடம் பெறவுள்ளன.

பிரஸ்தாப விளையாட்டுப் போட்டியின் இறுதியில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் அத்தனகலை உதவி அரசாங்க அதிபர் திரு. வோல்டர் கே. ஹேதுமுனி, நிட்டம்புவை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. லெவன்கம ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள். (320)

## உடற்பயிற்சி போட்டி இன்று

புங்குடுதீவு, ஜூன் 26

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் உடற் பயிற்சிப் போட்டி இன்று 27ஆம் திகதி காலை 8–30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள 11 வட்டாரக் கல்வியதிகாரிகள் பிரிவுகளிலும் ஏற்கனவே நடைபெற்ற போட்டியில் வெற்றியீட்டிய குழுக்கள் கலந்து கொள்ளும்.

யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த கல்வியதிகாரி (உடற் கல்வி) திரு. வி. தங்கராசா இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

(ந-240)

போது பல ஜூடோ வீரர்கள் தரம் உயர்த்தப்பட்டதுடன், அநேக ஜூடோக் கழகங்களுக்கு ஜூடோ சீருடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

ஜப்பான் நிறுவகம், கொடோ கான் (ஜப்பானிய ஜூடோ சம்மேளனம்) ஆகியவை அன்பளிப்புச் செய்த 65 ஜூடோ சீருடைகளை ஜப்பானிய தூதுவர் ஹிரோஷி நடாகா வழங்கினுர்.

கடற் படை, பொலீஸ், வை. எம். சி. ஏ., வை. எம். பீ. ஏ., கம்பளை ஜூடோ கழகம், இலங்கை ஜூடோ ஒன்றிணையத்துடன் சேர்ந்துள்ள காலே ஜூடோ பாடசாலை ஆகியவற்றிடையே இந்தச் சீருடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஜூடோ பயிற்சிகளுக்கும் ஜூடோ சுற்றுப் போட்டிகளுக்கும் இந்தச்

பத்தி செய்வது கஷ்டமானது என்பதையும், ஜூடோ விளையாட்டில் பயிற்சி பெற ஏராளமான விளையாட்டுப் பிரியர்கள் முன் வந்திருப்பதையும் ஜூடோ வீரர்கள் தூதுவரிடம் எடுத்துரைத்தனர்.

ஜூடோ வீரர்கள் உள்ளாகும் கஷ்டங்களை தெரிந்து கொண்ட தூதுவரின் பாரியார், ஜப்பானின் அதிகாரபூர்வ கொடோ கான் கழகத்தின் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டார். அதன் மூலம் ஜூடோ சீருடைகள் கிடைக்கப் பெற்றன. ஜப்பான் நிறுவகம் மேலதிக ஜூடோ சீருடைகளை பெற்றுத் தந்தது.

இதன் மூலம் ஜூடோ கழகங்களுக்கு பரந்த ரீதியில் பயிற்சிகளை மேற்கொள்ள ஏதுவாகிறது.

பரிசளிப்பு வைபவத்தின் போது 7 இலங்கை ஜூடோ வீரர்கள் சிரேஷ்ட ஜூடோ வீரர்களாக தரமுயர்த்தப்பட்டனர்.

இதற்கான தரப்படுத்தல்களை கடந்த பெப்ரவரியில் இலங்கைக்கு விஜயம் செய்த இரு ஜூடோ விற்பன்னர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இலங்கையின் ஜூடோத் தரத்தைப் பற்றி குறிப்பிட்ட ஜப்பானிய விற்பன்னர்கள் உயர்ந்த நிலையைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டனர்.

(ந)

# மட்டுநகரில் கலை, கலாசார போட்டிகள்

வவுணதீவு, ஜூன் 26

மட்டக்களப்பு கோட்டைமுனை இளைஞர் முன்னணி கழகத்தினரால் மட்டக்களப்பு வடக்கு, தெற்கு வட்டார பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற கலை, கலாசார போட்டிகளின் முடிவு விவரம் வருமாறு:—

பேச்சு தமிழ்:—

கீழ்ப் பிரிவு:– 1ஆம் இடம் — யோ. கல்யாணி (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — க. பகிரதன் (சிவானந்த வித்தியாலயம்), 3ஆம் இடம் — ந. வாசிகன் (மெதடிஸ்த மத்திய கல்லூரி).

மத்திய பிரிவு:– 1ஆம் இடம் — சி. வாசுகி (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — ஆ. திருமாவளவன் (சிவானந்த வித்தியாலயம்), 3 ஆம் இடம் - மு. தமிழன்பன் (அரசடி மகா வித்தியாலயம்).

மேற் பிரிவு:– 1ஆம் இடம் — சுகந்தினி (புனித சிசிலியா மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — க. இரத்தின ஜெயந்தி (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் — அ. ச. பாஹிமா (காத்தான்குடி 6ஆம் குறிச்சி அ. மு. க. பா)

பேச்சு ஆங்கிலம்:—

கீழ்ப் பிரிவு:– 1ஆம் இடம் — ப. ரேருகினி (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — ந. உமா (புனித சிசிலியா மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் — ப. சூரிய பிரதாபன் (சிவானந்த வித்தியாலயம்), வி. சஞ்சீவி (மெதடிஸ்த மத்திய கல்லூரி).

மத்திய பிரிவு:– 1ஆம் இடம் — இ. விருஜினி (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — செ. பங்கஜச் செல்வன் மெதடிஸ்த மத்திய கல்லூரி), 3ஆம் இடம் — எம். ஐ. ஸாகிரு (காத்தான்குடி 6ஆம் குறிச்சி அ. மு. க. பா).

மேற்பிரிவு:– 1ஆம் இடம் — த. சாமேன் (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — ரி. எல். முப்லிஹா (காத்தான்குடி 6ஆம் குறிச்சி அ. மு. க. பா,) 3ஆம் இடம் — த. றேகான் மெதடிஸ்த மத்திய கல்லூரி).

கர்நாடக இசை (தனி):—

கீழ்ப் பிரிவு:– 1ஆம் இடம் — கு. காயத்திரி (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — சி. விக்னேஸ்வரி (அரசடி மகா வித்தியாலயம்).

மத்திய பிரிவு:– 1ஆம் இடம் — சி. துளசி மலர் (வின்சட் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — ம. பிருந்தா (அரசடி மகா வித்தியாலயம்).

மேற் பிரிவு:– 1ஆம் இடம் — ச. வத்சலா (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் — செ. செல்வராணி (இராமகிருஷ்ண மிஷன் பெ. பா.)

கர்நாடக இசை (குழு):—

கீழ்ப் பிரிவு:– 1ஆம் இடம் (புனித சிசிலியா மகளிர் கல்லூரி), மத்திய பிரிவு:– 2ஆம் இடம் — புனித சிசிலியா மகளிர் கல்லூரி.

பரத நாட்டியம் (தனி):—

கீழ்ப் பிரிவு:– 1ஆம் இடம் — க. ஜீவா (வின்சன்ட் மகளிர் கல்லூரி).

மத்திய பிரிவு:– 1 ஆம் — இடம் க. கீதா (வின்சன்ட் மகளிர் கல்லூரி).

மத்திய பிரிவு:– 1ஆம் இடம் — கு. அரவிந் (சிவானந்த வித்தியாலயம்), 2ஆம் இடம் — அ. சாமிலா (வின்சன்ட் மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் — பிரதீபா (இ. கி. மி. பெ. பா.)

நடனம் (குழு):—

மத்திய பிரிவு:– 1ஆம் இடம் — புனித சிசிலியா மகளிர் கல்லூரி.

மேற் பிரிவு:– 1ஆம் இடம் — புனித சிசிலியா மகளிர் கல்லூரி.

பொது அறிவுப் போட்டி:—

1ஆம் இடம்– கோட்டை முனை மகா வித்தியலயம். 2ஆம் இடம் — மெதடிஸ்த மத்திய கல்லூரி.

இப்போட்டிக்குரிய ஒழுங்குகளை கோட்டைமுனை இளைஞர் முன்னணி கழகத்தின் செயலாளர் த. ஈஸ்வரராஜா மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ந-318)

# கழக றகர் போட்டிகள்

கொழும்பு, ஜூன் 27

கண்டி அணிக்கும், விமானப்படை அணிக்குமிடையில் நித்தவலையில் நடைபெற்ற றகர் போட்டியில் கண்டி அணி 13 – 9 புள்ளிகளால் வெற்றிபெற்றது.

இடைவேளையின்போது 10 – 6 புள்ளிகளால் கண்டி அணி முன்னணியில் நின்றது.

தயாசிறி, லனில் தென்னக்கோன் ஆகியோர் கண்டி அணிக்கும்,

டோனி விமலசூரிய விமானப் படை அணிக்கும் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

இப்போட்டியில் மத்தியஸ்தம் வகித்த சி. எச். செனவிரத்ன அந்து போட்டியின் 3- ஆவது நிமிடம் காலில் காயமேற்பட்டதைத் தொடர்ந்து இர்வின் ஹோவி மத்தியஸ்தம் வகித்தார். (ந)

★

கொழும்பு, ஜூன் 27

இராணுவ அணிக்கும், சி. எச். அன்ட் எப். சி- அணிக்குமிடையே காலி முகத்தில் நடைபெற்ற றகர் போட்டியில் இராணுவ அணி 16 – 10 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின்போது 9 – 6 புள்ளிகளால் இராணுவ அணி முன்னணியில் நின்றது.

சந்திரசிறி, டபிள்யூ. எஸ். பெர்னுண்டோ உபுல் ஏகநாயக்க ஆகியோர் இராணுவ அணிக்கும்; சந்ராணன் பெரேரா, ஜானகி டி சில்வா, ஸ்ரீதரன் ஆகியோர் சி. எச். அணிக்கும் புள்ளிகளை பெற்றுக் கொடுத்தனர்.

இப் போட்டிக்கு மத்தியஸ்தராக நிமல் லூக் கடமையாற்றினுர். (ந)

## மெய்வல்லுனர் போட்டி நாளை

மாத்தறை, ஜூன் 26

மாத்தறை மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை 28 ஆம் திகதி மாத்தறை உயன்வத்தை விளையாட்டரங்கில் நடைபெறும்.

விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் 12 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெறவிருக்கும் இந்த விளையாட்டுப் போட்டியில் சுமார் 400 வீரர்கள் கலந்து கொள்வார்கள்.

அன்றைய தினம் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவிருக்கும் பரிசளிப்பு வைபவத்தில் மாத்தறை மாவட்ட அமைச்சர் திரு. கீர்த்தி அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொள்வார். (ந-25)

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்

# வடக்கு, கிழக்கில் 6 மாவட்ட சபைகள் கலைப்பு

கொழும்பு, ஜூன் 27

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய ஆறு மாவட்ட அபிவிருத்தி சபைகளும் கடந்த 25 ஆம் திகதி முதல் கலைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சபைகளின் அதிகாரங்கள், கடமைகள், உரிமைகள், சிறப்புரிமைகள் என்பனவற்றைப் பிரயோகிப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும், நிறைவேற்றுவதற்குமான சகல பொறுப்புகளும் சம்பந்தப்பட்ட சபைகளின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

1984ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க அவசர கால (அபிவிருத்திச் சபை) ஒழுங்கு விதியின் கீழ், பிரதமரும், உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத் துறை, அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாச, இச்சபைகள் தம்மால் கலைக்கப்பட்டிருப்பதாக வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

இந்த சபைகளின் உறுப்பினர்களின் பதவி துறப்பு, பதவியை காலி செய்தமை காரணமாக, சபைகள் இயங்கும் நிலையில் இல்லாத காரணத்தால் இவைகள் கலைக்கப்பட்டிருக்கின்றன.

பொது மக்கள் பாதுகாப்பு நலனுக்காகவும், பொது ஒழுங்கினைப் பேணுவதற்காகவும், சமூகத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கீடுகளையும் சேவைகளையும் பேணுவதற்காகவும், அத்தகைய சபைகளையும், சபைகளின் நிறைவேற்றுக் குழுக்களையும் கலைப்பது அவசியம் என்றும் வர்த்தமானியில் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

# ஆயுதங்களை கைவிட்டு உடன்பாட்டுக்கு வாருங்கள்

## வடபகுதி தீவிரவாதிகளுக்கு சர்வமத தலைவர்கள் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 27

வடபகுதி தீவிரவாதிகள் ஆயுதங்களை கைவிட்டு நாட்டின் சமாதானம் விரும்பும் மக்களுடன் உடன்பாடு ஒன்றுக்கு வர வேண்டும்.

இப்படி வெள்ளவத்தை இராம கிருஷ்ண மண்டபத்தில் திங்களன்று நடைபெற்ற ஐக்கிய மத ஸ்தாபன மாநாட்டில் யோசனை தெரிவிக்கப்பட்டது. மாநாட்டுப் பேச்சாளரான வண. திஸ்ஸ பாலசூரிய இந்த விவரத்தைத் தெரிவித்தார்.

மாநாட்டில் 7 மாகாணங்களையும் சேர்ந்த 78 மதத் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். நாட்டின் பிரதான நான்கு மதங்களையும் உள்ளடக்கியதாக இந்த மாநாடு நடைபெற்றது.

மாநாட்டுப் பிரதிநிதிகள் 7 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பிரச்சினைகளை ஆராய்ந்தார்கள்.

நாட்டில் உள்ள அரசியல், மதத் தலைமையில் நம்பிக்கை குறைவாகவே இருக்கிறது என்பதில் பொதுவான கருத்தை கமிட்டிகள் வெளிப்படுத்தின.

அனைத்து மக்களினதும் நலன் கருதி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இவ்வாறான தீர்வு ஏற்பட்டால் மட்டுமே மதக் குழுக்களினால் நல்லெண்ணத்தை கட்டி எழுப்ப முடியும் என்பதில் குழுக்கள் பொதுவான இணக்கக் கருத்தைக் கொண்டிருக்கின்றன.

அதிகார பரவலாக்கம் சிறந்த அரசாங்கத்திற்கு வழிவகுக்கும். பிரிவினைவாத எதிர்ப்பு என்ற கோதாவில் இது முக்கியமானதாகும் என்று கமிட்டிகளில் ஒன்று கருத்துத் தெரிவித்தது.

மக்கள் பிரதிநிதிகளின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக பாரபட்சமற்ற சுதந்திரமான நிரந்தர மனித உரிமை கமிஷன் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டிருக்கிறது.

இளைஞர்களுக்கும், ஆயுதப் படையினருக்கும் இடையில் நிலவும் சந்தேகம், அச்சம் ஆகியனவற்றை ஒழிக்க வேண்டும் என்று வட மாகாணப் பிரதிநிதிகள் தெரிவித்தார்கள்.

பயங்கரவாதிகள் என்ற பதம் அவர்களை அந்நியப்படுத்துகிறது. அரசையும் பாதிக்கிறது என்றும் அவர்கள் சொன்னார்கள்.

எதிர்வரும் ஜூலை 22ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட விருக்கும் சமாதான வாரம் பற்றியும் ஆராயப்பட்டது.

ஜூலை 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை எட்டு உறுப்பினர்களை உள்ளடக்கிய நான்கு மதங்களினதும் பிரதிநிதிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம், குருநாகல், அனுராதபுரம், திருகோணமலை, கண்டி, பதுளை, மட்டக்களப்பு, இரத்தினபுரி, காலி, கொழும்பு ஆகியனவற்றுக்கு சமாதான சுற்றுலா ஒன்றை மேற்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

ஜூலை 12ஆம் திகதி எசல போயா தினத்தை அனைத்து மத தினமாகப் பிரகடனப்படுத்துவது என்றும், ஜூலை 22ஆம் திகதி கொழும்பில் நான்கு மௌன ஊர்வலங்களை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஊர்வலங்களின் முடிவில் பொதுக் கூட்டம் ஒன்று நடத்தப்படும். (ண)

## அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஜூன் 27

"மக்களினது உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பேராபத்தான நிலையை உருவாக்கும் நிலையில் கலவரத்தை முறியடிப்பதற்காக பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இது காலஞ்சென்றவர் உயிர் துறப்பதற்கு காரணமாகியது. சட்ட வரம்புக்குள் பொலீஸார் செயற்பட்டிருக்கின்றனர்."

கடந்த 21ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மாணவரான ரேகண ரட்ணயக்க, பொலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் மரணமானார்.

இவரது மரண விசாரணையை மேற்கொண்ட மாஜிஸ்திரேட் மேற்கண்டவாறு தீர்ப்பளித்திருப்பதாக, ராஜாங்க அமைச்சு திங்களன்று அறிவித்தது. (ண—ங)

## மாநாடு

கொழும்பு, ஜூன் 27

உலக கடற்றொழில் மாநாடு ஒன்று இன்று 27 ஆம் திகதி முதல் ஜூலை ஆறும் திகதி வரை ரோமாபுரியில் நடைபெறும்.

ரோமாபுரியில் உள்ள சர்வதேச உணவு, விவசாய அபிவிருத்தி ஸ்தாபனத்தின் தலைமையகத்தில் இம்மாநாடு நடைபெறும். (ண—11)



தேசிய பாதுகாப்பு அமைச்சரும் பதில் பாதுகாப்பு அமைச்சருமான திரு. லலித் அத்துலத் முதலி கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலி மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் வைத்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம். (ண—ச*)



பலாலி மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் வைத்து அமைச்சர் திரு. அத்துலத் முதலி மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் இது. (ண—ச*)

# றைகம் தோட்ட காணிப் பங்கீடு இடைநிறுத்தம்

# வங்காளத்தில்

# வங்காளத்தில் காலரா நோய் வேகமாக பரவுகிறது

## கடந்த ஒரு மாதத்தில் 300 பேர் பலி

டாக்கா, ஜூன் 26

வெள்ளத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வங்காள தேசத்தின் பரித்பூர் மாவட்டத்தில் காலரா நோய் பரவியுள்ளது.

இப் பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக சுமார் 300 பேர் காலரா நோயால் இறந்துள்ளனர்.

வங்காள பாஷை தினசரி ஒன்று இதனை அறிவித்துள்ளது.

மேலும் பலர் இந் நோயால் பாதிக்கப்பட்டு இருக்கலாமென அரசாங்க சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளதாக தினசரி மேலும் அறிவித்தது.

குடிநீர் பற்றுக்குறை காரணமாகவே இந்த நோய் வேகமாகப் பரவி வருவதாக கூறப்படுகிறது.

(ந)

# இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 27

இங்கிரியா றைகம் தோட்ட காணிப் பங்கீடு ஜனாதிபதி நாடு திரும்பும் வரை இடை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியிடம், ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஜனாப் எஸ். எம். எல். மரிக்கார் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இங்கிரியா மாவட்டத்தைச் சேர்ந்த றைகம் தோட்டத்தில் நூறு ஏக்கர் காணியைச் சுவீகரித்து காணியற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதே தோட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் இலங்கைப் பிரஜா உரிமையுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும் காணி வழங்கப்பட வேண்டும் என இ. தொ. கா. வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா அங்குள்ள தொழிலாளர்கள் விண்ணப்பம் செய்தால் தகுதியுடையவர்களுக்கு காணி வழங்கப்படும் என உறுதியளித்தார்.

ஆனால் காணி வழங்கும் பொழுது கிராமத்தவர்களுக்கு மட்டுமே பிரித்துக் கொடுக்கப்பட்டது.

இதனை ஆட்சேபித்து இ. தொ. கா. பொதுச் செயலாளர் காணி அமைச்சருடனும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து காணிப் பங்கீடு ஒத்திவைக்கப்பட்டது.

தற்பொழுது ஜனாதிபதி நாட்டில் இல்லை. இந்தச் சமயத்தில் மீண்டும் காணிகளைப் பங்கிடுவதில் சில அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.


எனவே திரு. செல்லச்சாமி இந்த விவகாரத்தை ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஜனாப் மரிக்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

திரு. செல்லச்சாமியின் முறைப்பாட்டைத் தொடர்ந்து இக்காணிப் பங்கீடு, ஜனாதிபதி நாடு திரும்பும்வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என இ. தொ. கா. இணைப்பதிகாரி திரு. மைக்கல் ஜோசப் தெரிவித்தார்.

(ண-ய)



பலாலி மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் வைத்து அமைச்சர் திரு. அத்துலத் முதலி மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் இது. (ண-ச)



அமைச்சர் திரு. அத்துலத் முதலி குருநகரில் உள்ள இராணுவ முகாமைப் பார்வையிடுவதைப் படத்தில் காண்கிறீர்கள். [படங்கள்: ஹரி டிக்கும்புற] (ண-தி)

மலையக தோட்டப் பகுதிகளில்

# கண் பிடுங்கல் வதந்திக்கு எதிராக நடவடிக்கை

## பதுளை பொலீஸ் அதிபர் உத்தரவு

கொழும்பு, ஜூன் 27

மலையகத் தோட்டப் பகுதிகளில் வதந்திகளைப் பரப்புவோர் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும்.

இப்படி பதுளை பொலீஸ் அதிபர் திரு. எஸ். பீ. ரன்தெனி, அப்பகுதி பொலீஸ் நிலையங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த இரு வாரங்களாக பசறை, பதுளை, ஊவா பரணகமை ஆகிய பகுதிகளில், பிள்ளைகளைப் பிடித்து அவர்களின் கண்களை பலாத்காரமாகப் பிடுங்கி எடுக்கிறார்கள் என்று ஒருசாரார் பொய் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர்.

இது தொடர்பாக பொலீஸ் அதிபர் கவனத்தில் எடுத்துக் கொண்டார். அப்போது அவ்வாறான முறைப்பாடுகள் எதுவும் இதுவரை பொலீஸாருக்குக் கிடைக்கவில்லை என தெரிய வந்தது.

இவ்வாறு கண்கள் பிடுங்கப்பட்ட பிள்ளைகளின் சடலங்கள் பாதையில் அனாதரவாக போடப்பட்டுள்ளன என்றும் வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன. இது தொடர்பாகவும் பொலீஸ் அதிபர் சோதனைகளை நடத்தி வருகிறார்.

இது தொடர்பாக பதுளை ஆஸ்பத்திரியின் கண் சிகிச்சைப் பிரிவு அதிகாரிகளிடம் வினவப்பட்டது.

ஒரு நபர் தாக்கப்பட்டதால், அவரது கண் சிறிது பாதிப்பு அடைந்திருந்தது. தற்சமயம் அவர் சுகமாக வீடு திரும்பி விட்டார் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

வதந்திகள் பரப்புவோரைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு கடும் தண்டனை வழங்குவதற்கு பதுளை பொலீஸ் அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

(ண-11)

# வர்த்தகத்துறையின் எதிர்காலம் குறித்து உயர்மட்டப் பேச்சுவார்த்தை

## அமைச்சர் வங்காளதேசம் செல்வார்

கொழும்பு, ஜூன் 27

வர்த்தகத் துறையின் எதிர்காலம், பொருளாதார அபிவிருத்தி என்பன குறித்து உயர் மட்ட பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி அடுத்த மாதம் வங்காள தேசம் செல்லவிருக்கிறார்.

ஒன்றிணைக்கப்பட்ட வர்த்தக சபை ஒன்றை அமைப்பதற்கான வழி வகைகளை ஆராய்வதே இந்தப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய நோக்கமாகும் என்று தெரிய வருகிறது.

ஜூலை மாதம் 30ஆம் திகதி பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவிருக்கின்றன.

ஒன்றிணைக்கப்பட்ட வர்த்தக சபை ஒன்றை அமைப்பதற்கு கடந்த 1977 ஆம் ஆண்டே முதற் தடவையாக ஆலோசிக்கப்பட்டது.

இருநாட்டு வர்த்தக, பொருளாதார நட்புறவுகளை வலுப்படுத்துவதும் இந்தப் பேச்சுவார்த்தையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும்.

மேற்படி பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக, அமைச்சர் அமரசிறியுடன் அமைச்சின் செயலாளர் திரு. லக்ஷ்மன் டி மெல், வர்த்தக, கப்பல் துறைப் பணிப்பாளர் திரு. எம். மரியதாஸ் ஆகியோரும் வங்காளதேசம் செல்லவிருக்கின்றனர்.

வங்காளதேசம் சார்பாக அந்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜனாப் எம். ஏ. மபீக் உட்பட அவரது அதிகாரிகள் பலர் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்கள்.

(ன-11)

# இடைக்கால குழு நியமனம்

கொழும்பு, ஜூன் 27

"போக்குவரத்து இணைப்பு, திட்டமிடல்" சம்பந்தமாக இடைக்கால அமைச்சரவை குழு ஒன்றினை போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது, அரசின் அனுமதியுடன் நியமித்திருக்கிறார்.

போக்குவரத்து அமைச்சின் செயலாளரான திரு. மஹிந்த இளையப்பெரும இந்த குழுவின் தலைவராவார்.

போக்குவரத்துச் சபை அமைச்சின் செயலாளர் திரு. விக்டர் ரூபசிங்க, தனியார் பஸ் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் திரு. மெரிக் பெரேரா, உட்பட திறைசேரி, நெடுஞ்சாலை, நிதி திட்டமிடல், அமைச்சுகளின் பிரதிநிதிகளும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழு பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக ஆராயும்:—

* போக்குவரத்து கொள்கைகளுக்கான சட்ட வரைவு.
* போக்குவரத்து தொழில் நுட்பம் — ரயில், பாதை, நீர் வழிகள்.
* போக்குவரத்து நடை முறைகள்.
* வாகன முகாமைத்துவம்
* போக்குவரத்து மாதிரிகள்,
* நவீன மூலவள செலவீனம், வாகன அமைப்புகள், வரிகள் மானியங்கள்.
* வாகன நடைமுறை ஆய்வு
* போக்குவரத்தின் பழைய நடைமுறைகளால் ஏற்பட்டிருக்கும் விளைவுகள்.

இவைகள் சம்பந்தமாக தனிப்பட்ட ஆலோசனை குழுக்களும் இயங்கி வருகின்றன. இதேவேளை இந்தத் தனிப்பட்ட குழுக்களினதும், தனியாரினதும் ஆலோசனைகளையும் புதிய குழு பெறும்.

ஆலோசனை வழங்க விரும்புவோர் ஜூலை 31ஆம் திகதிக்கு முன்னர் இக்குழுவுக்கு விண்ணப்பிக்கலாம்.

(ண-ங)


தரமான

22 கரட் தங்க

நகைகளுக்கு...



ஏ. கே.

கோல்ட் ஹவுஸ்

இல. 79, செட்டியார் தெரு,

கொழும்பு - 11.

தொலைபேசி:- 28991 — 33712


தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.


இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12, (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 27 ஜூன் 1984

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 1 2 P. O. Box 1613.